பக்கங்கள்-16 தை 06,2013 விலை-30.00

விளம்பரங்கள்
அனைத்துவகையான
விளம்பரங்களையும்
பிரசுரிக்க
நாடுங்கள்...
தினப்புயல்
154, 6ம் ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

நடுநிலை இதழ்

# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

அன்பான வாசக நெஞ்சங்களே
எமது
தினப்புயல் பத்திரிகை
தொடர்பான அனைத்து
விமர்சனங்களையும்,
ஆக்கங்களையும்,
வரவேற்கின்றோம்.

மலர்-01 Tel&Fax:(+94)247451360-1, Hot line:0711850885 Email:tthinappuyalnews@yahoo.com இதழ் -23



## தமிழர் போராட்டத்தை பலவீனப்படுத்தியது மஹிந்தவின் வன்னிப் படுகொலையா? பிரபாகரனின் சகோதரப் படுகொலையா?

## ஈழத்தமிழரின் அரசியல் இருப்பை முன்னகர்த்தும் காரணிகள்

## மாணவர் சமுதாயத்திற்கு நான் என்றும் கை கொடுப்பேன்

-அமைச்சர் டக்ளஸ்




-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# தமிழர் போரட்டத்தை பலவீனப்படுத்தியது மஹிந்தவின் வன்னிப்படுகொலையா? பிரபாகரனின் சகோதரப்படுகொலையா?

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, இனப்படுகொலையினை முள்ளிவாய்க்கால் வரை, கட்டவிழ்த்துவிட்டதாக விடுதலைப் புலிகளின் ஊடகங்கள், மற்றும் பல இணையத்தளங்கள் சர்வதேச அளவில், செய்திகளை வெளியிட்டிருந்தன. கடந்த 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மற்றும் மே மாதங்களுக்கிடையில், இலங்கையின் வடக்குப் பகுதியில் இடம்பெற்ற யுத்தத்தின் போது, ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள், அரச படையினரால் திட்டமிட்டு கொலை செய்யப்பட்டதாக, எழுந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு, அரசு மறுப்பு தெரிவித்து வரும் அதேநேரம், வெளி நாடுகளில் விடுதலைப்புலிகளுககு ஆதரவாளர்களான பலரும், மஹிந்த ராஜபக்சவை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தும் ஒரு நடவடிக்கையாகவே, இதனைப்பார்க்கிறது. இலங்கை சிங்கள அரசுத் தலைமைகளும் மறுபக்கத்தில் அதையே கூறிவருகின்றனர்.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது, கடைசி இரு வாரங்களில், 7,000 இற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக, ஐ.நாடுகள்



சபையின் கிளையமைப்புக்களால் கூறப்பட்டது. சுமார் 25,000 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக, விடுதலைப்புலிகளின் ஊடகங்களினால் கூறப்பட்டது. அப்போதும் கூறப்பட்டது இப்போதும் கூறப்பட்டுவருகின்றது. இவை எல்லாவற்றிற்கும் அப்பால், இலட்சக்கணக்கான பொதுமககள் கொல்லப்பட்டதாக, தமிழகத்தைச் சேர்ந்த தலைவர்கள் சிலர், பிரச்சாரத்தினை மேற்கொண்டுள்ளனர். கொல்லப்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் குறித்து, கவலைகாட்டுவதும் அதனை வைத்து அரசியல் செய்யும் ஆர்வமுமே, இங்கு அதிகமாக இருப்பதனைக் காணலாம்.

அரசியல் நிலைமைகள் பற்றியே சிந்திக்காக, ஆயிரக்கணக்கான பொதுமக்கள், இறுதிக்கட்ட யுத்தத்தின் போது, இருபகுதியினருக்கும் இடையில் சிக்கிக்கொண்டு இறந்துபோனார்கள். நூற்றுக்கணக்கானோர் உடல் அங்கங்களை இழந்தும். இருக்கின்றனர். இவர்களுக்கு மறுவாழ்வு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படல் வேண்டும். எஞ்சியவர்களுக்கும் நல்லதொரு கௌரவமான அரசியல் தீர்வினை பெற்றுக்கொடுக்கவேண்டும் என்பதனைக்காட்டிலும், இந்த மக்களின் அவலங்களில் அரசியல் காய்நகர்த்த பலர் முற்படுகின்றனர்.

தமிழகத்தில் உள்ள தமிழ்தலைவர்கள், அரசியல் பிழைப்புக்காக ஈழத்தமிழ் பெண்களின் பால், களங்கம் கற்பிக்கிறார்கள். முகாம்களிலிருந்த தமிழ்ப்பெண்கள், ஆயிரக்கணக்கானோர் இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு அவர்கள் கர்ப்பமாக இருக்கின்றார்கள் என்றும், அவர்களின் கருக்களை அழிப்பதற்கு சிஙகளப் படையினரால், தடைவிதிக்கப்படுவதாகவும், தமிழ் நாட்டில் ஒரு சிலரின் பிரச்சாரங்கள், இப்படி அமையப்பெற்றுள்ளன. இதே சமயம், இலங்கையில் இனக்கலப்பு செய்யப்படுவதன் ஊடாக, தமிழ் இனம் அழிவதாக இந்திய எழுத்தாளர் “சாரு நிவேதிதா” சுட்டிக் காட்டுகிறார்.

எதையும் ஆராய்ந்து கருத்துக்களைக் கூறும் எழுத்தாளர்கள் கூட, நம்புமளவிற்கு வைகோ, சீமான், நெடுமாறன் போன்றோரின் பிரச்சாரங்கள், தமிழகத்தில் பாதிப்பினை ஏற்படுத்துயுள்ளன. ஈழத்தமிழினம் ஒடுக்கப்படுகின்றது, கெடுக்கப்படுகின்றது, என்பதைக் காட்டுவதற்கு, இவ்வாறான ஈழத் தமிழ்ப் பெண்களை இழிவுபடுத்தியா பிரச்சாரம் செய்யவேண்டும்? புலிகளின் தலைவரும் அந்த அமைப்புகளுடன் ஏற்கனவே நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தார். விடுதலைப் புலிகள் சகோதர இனப் படு-கொலைகளை மேற்கொண்டு, தமிழ்த் தரப்பினை பலவீனப்படுத்தி இருந்தார்கள். தற்பொழுது அவர்களின் பெயரை சொல்லியவாறு, ஒரு கூட்டம் ஈழத்தமிழர்களை இழிவு படுத்தி வருகின்றது. எமக்கு ஆதர்வாகத்தானே குரல் கொடுக்கின்றார்கள். ஆகையினால் எதையும் கூறட்டுமே, என்று ஈழத் தமிழ் அனுதாபிகள் நினைத்து கொள்ளக் கூடும். இவர்கள் இப்படியாக கோமாளித்தனமாக பேசுவதினால், தமிழகத்தில் இருந்து உண்மையாகக் கொடுக்கப்படும் குரல்களும், கோமாளிக் குரல்களாகத் தோன்றக்கூடிய நிலை ஏற்படும். என்பதினை, அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். மஹிந்த அரசு இனப்படுகொலைகளைச் செய்வதாகக் கூறிக்கொண்டு, மறுபுறத்தே சகோதரப்படுகொலைகளை புலிகளின் ஊக்குவிப்பாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

## இனப் படுகொலையும் சகோதர படுகொலையும்

இலங்கையில் நடத்தப்படுவது இனப்படுகொலையா, அல்லது இனச்சுத்திகரிப்பா என்கின்ற ஆய்வினைச் செய்வது அல்ல, இந்த கட்டுரையின் நோக்கம். பிரபாகரனால் மேற்கொள்ளப்பட்ட சகோதரப் படு-கொலைகள், எவ்வண்ணம் சிங்கள இனவாதிகளுக்கு, பெரிதும் உதவியது என்பதினைப் பார்க்கவேண்டும். பிறிதொரு இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு எதிராக, தாக்குதலை மேற்கொள்வதின் மூலம், தமிழ்த் தேசிய போராட்டத்தினை முன்னெடுக்க முடியும் என்று, பிரபா-கரனும் அவருடன் சேர்ந்தவர்களும் எப்படி விளங்கிக் கொண்டார்களோ, அவ்வாறே தமிழர்களை அடக்கி ஆளுவதன் மூலமும், அவர்களை எந்த பகுதியிலும் பெரும்பான்மையாக இல்லாதவர்களாக ஆக்குவதின் மூலமும், தமிழர்களின் அரசியல் அங்கீகாரம் என்ற கோசத்தினை, ஒழித்துவிட முடியும் என்று, பேரினவாத தலைவர்கள் நம்புகி[illegible]ார்கள். இந்தத் தலைமைகளை மகுடம் தரிக்க வைத்த பிரபா[illegible], தனது இராட்சியத்தினை பறிகொடுத்ததோடு, தனது வம்சத்தையே இழந்தார். இவர் மட்டும் சகோதரப் படுகொலைகளை மேற்கொள்ளாது, அந்த அமைப்புக் களோடு உறவுகளை பேணி வந்திருந்தால், இவருக்கு இந்த முடிவு சிலவேளை ஏற்படாது இருந்திருக்கக் கூடும்.

## யார் தூண்டுதலில் புலிகள் அமிர்தலிங்கத்தினைக் கொன்றார்கள்.

இந்திய புலனாய்வு துறையினரின் தூண்டுதலினால், முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களான தருமலிங்கம் மற்றும் ஆலாலசுந்தரம் ஆகியோரை ரெலோ அமைப்பினர் கொலை செய்ததாக “தமிழ்வின்” இணையத்தளத்தில், ஆய்வாளர் ஒருவர் அண்மையில் எழுதியிருந்தார். இதன் மூலம் புலி இயக்கம், எவரினதும் தூண்டுதலுக்கு துணை போகவில்லை என்பதினை, அவர் கூறுவதற்கு முயற்சித்து இருந்தார்.

பிரபாகரன் தமிழ்த் தலைவர்கள் பல-ரையும், சகோதர இயக்கத் தோழர்கள் ஆயிரக்கணக்கானோரையும், கொலை செய்தமை அவருக்கு இருந்த தலைமை வெறியே காரணம் என்பதினைக் கூறுவதற்கு, ஆராய்ச்சி தேவையில்லை. சமாதான காலகட்டத்திலும் கூட, சகோதர இயக்க உறுப்பினர்கள் பலர் ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்பட்டனர்.

கொலைப் பிரிவில் பிரபாகரனுக்கு இருந்த ஈடுபாடு இக் கொலைகளை அவதானிக்கும் போது தெளிவாகத் தென்படுகிறது. தனது ஆளுமை குறித்த அவநம்பிக்கை, எப்போதும் பிரபாகரனுக்கு அதிகமாகவே இருந்தது. மாற்றுக் கருத்துக்களை எதிர்கொள்ளும் ஆற்றலும், பொறுமையும் அவரிடம் இல்லாமையினால், சம்பந்தப்பட்ட அவர்களைக் கொலை செய்வதுதான், தன்னை தக்க வைத்துக் கொள்ளும் ஒரே வழி என்று, அவர் நம்பி இருந்தார். இதன் மூலம் எதிரிகளற்ற சாம்ராஜ்ஜியத்தை உருவாக்க அவர் முயற்சித்தார்.

இலங்கையின் பாதுகாப்பு செயலரும், ஜனாதிபதியின் சகோதருமான கோத்தபாய ராஜபக்ச, இராணுவத் தளபதி சரத்பொன்சேகா ஆகியோரைக் கொலை செய்வதற்கு, கரும்புலிகளை அனுப்பித் தாக்குதலை மேற்கொண்டுவிட்டு, இறுதி நேரத்தில் அவர்களிடமே பிரபாகரன் சரண் அடைந்திருந்தார். அரச படைகளிடம் சரண் அடையுங்கள், நாங்கள் எல்லாம் பேசிவிட்டோம், என்று சமரசம் பேசிய ஐரோப்பிய அமைச்சர் ஒருவர், சுயாதீன அமைப்புக்கள் சிலவும் கூறியபோது, அதனை நம்பி சரண் அடையும் அளவிற்கு, பிரபரகரன் இருந்திருப்பாரா? என்று புலிகளின் கல்விமான்கள் சிந்திக்கின்றவேளை, அவர்களையும் கொலை செய்வதற்கு, பிரபாகரன் கரும்புலிகளை அனுப்பியுமிருந்தார். அவர்கள் என்னைச் சும்மா விடுவார்களா என்று பிரபாகரன் சிந்தித்தாரா? வெளிநாட்டு சத்திகளின் தூண்டுதல்களுக்கு இணங்கி செயற்படுபவராகவே அவர் எப்போதும் இருந்து வந்துள்ளார்.

ரெலோ இயக்கம் அன்னிய புலனாய்வு துறையினரின் தூண்டு தலில், வி.தருமலிங்கம் அவர் களையும் ஆலாலசுந்தரம் அவர்களையும் கொலை செய்தது என்றால், ரெலோ தலைவர் சிறிசபாரத்தினம், தமிழர் விடுதலை கூட்டணி தலைவர்கள் அமிர்தலிங்கம் மற்றும் யோகேஸ்வரன், ஈ.பி.ஆர.எல். எப் அமைப்பின் தலைவர் பத்மநாபா ஆகியோரை யாரின் தூண்டுதல் மூலம் பிரபாகரன் கொலை செய்து இருந்தார் என்பது சிந்திக்க வேண்டிய விடயம்.

உங்களுடைய மக்களை சிங்கள அரசு கொல்லுகின்றது என்றால், நீங்களும் அவர்களுடைய மக்களை கவனிக்கலாம் தானே என்று, ஒரு புலனாய்வு துறை அனைத்து அமைப்புக்களுக்கும் கூறியபோது, புலிகள் மட்டும் அதனை செவிமடுத்து கொக்கிளாய், நாயாறு கிராமங்களுக்குள் புகுந்து சிங்கள அப்பாவி மக்களைக் கொன்றார்களே. அன்றே தமிழ் ஈழ விடுதலைப் போராளிகள், அப்பாவி மக்களையும் குழந்தைகளையும், கொலை செய்யும் பயங்கரவாதிகள் என்று, சர்வதேச சமூகத்தினால் முத்திரை குத்தப்பட்டார்கள். இதுவே சிங்கள அரசிற்கு கிடைத்த முதல் சர்வதேச ஆதரவாக இருந்தது.

சிறிசபாரத்தினத்தையும், ரெலோ இயக்க உறுப்பினர்கள் நூற்றுக் கணக்கானோர்களையும் புலிகள் கொலை செய்துவிட்டு, தங்களிடம் இருந்த வாகனங்கள் பொருட்கள் எல்லாவற்றையும் வீதியில் அடுக்கி வைத்து, இவர்கள் மக்களின் சொத்துக்களைக் கொள்ளை அடித்து வந்ததால், நாம் இதனை செய்தோம் என்று கூறியிருந்தார்கள். 1980 ஆம் ஆண்டளவில் யாழ். குரும்பசிட்டியில், வன்னியசிங்கம் என்பவரின் நகைக்கடைக்கு சென்ற பிரபாகரன், துப்பாக்கி முனையில் அங்கிருந்த நகைகளை கொள்ளை அடித்தார். அந்தக் காலத்தில் இயக்கங்கள், அரச வங்கிகளை மட்டுமே கொள்ளை அடித்து வந்தன. தனியார்களின் சொத்துக்களைத் தொடுவதில்லை. ஆகையினால் கொள்ளை அடிக்க வந்தவர்கள், தனிநபர் கொள்ளையர்கள் என்று நினைத்த, சுருட்டுத் தொழிலாளர்கள், பிரபாகரன் குழுவினரை சுற்றி வழைத்து இருந்தார்கள். அப்போது பிரபாகரன் தனது கையால், சுருட்டுத் தொழிலாளி ஒருவரைச் சுட்டுக்கொன்றுவிட்டு, நகைகளுடன் தப்பி சென்றிருந்தார். இவரின் இயக்கம், ரெலோவைக் கள்ளர்கள் என்று குற்றம் சாட்டியது, “குயிலை பார்த்து காகம் கறுப்பு” என்று கூறிய கதை போலவே இருக்கிறது.

இந்திய இலங்கை உடன்படிக்கைக்கு எதிராக, புலிகள் இந்திய படையினருடன் மோதலில் இடம் பெற்றவேளை, அப்போதைய இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா, புலிகளுக்கு ஆயுத மற்றும் நிதி உதவிகளை வழங்கியிருந்தார். மேலும் அண்ணன் தம்பதிகளுக்கு இடையில், ஆயிரம் பிரச்சினைகள் இருந்தாலும், தாம் அதனைப் பேசித் தீர்த்துக்கொள்வோம். ஆனால் அன்னியன் இடையில் தேவை இல்லை என்றும் கூறியிருந்தார். அத்துடன் இந்தியப் படையினை வெளியேறுமாறும் கோரயிருந்தரார். இதேவேளை வட கிழக்கு இணைந்த, மாகாண ஆட்சியை நடத்துவதற்க்கு,



எதிராக புலிகளுடன் இணைந்து தடை ஏற்படுத்தி வந்தார்.

ஜே.ஆர் ஜயவர்த்தனாவுடன், ராஜீவ் காந்தி ஏற்படுத்திய ஒப்பந்தத்திற்கு மாறாக, பிரேமதாசா புலிகளுடன் இணைந்து செயற்பட்டமை, இந்திய அரசிற்கு ஆத்திரமூட்டியிருந்த அந்த வேளையில், இந்திய அரசு அமிர்தலிங்கம் அவர்களை

04 ஆம் பக்கம் பார்க்க...

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## பல்கலை, மாணவர்கள் மீதான அடக்குமுறையானது, நாட்டின் நிரந்தர அமைதியைச் சீர்குலைக்கும்.

வருங்கால இலங்கை தேசத்தை, சிறப்பு மிக்கதொரு நாடாகக் கட்டியெழுப்பும், பாரிய பொறுப்பு மிக்கதும் மிகப்பெரிய சக்திபடைத்ததுமானபடையணி, மாணவப் படையணி என்பதற்கு மாற்றுக்கருத்துக் கிடையாது.

காலத்துக்குக் காலம் சிங்களப் பேரினவாதக் கரங்கள், தமிழ் மாணவ சமூகத்துடன், பலப் பரீட்சைகளை மேற்கொண்டுவருவது, எமது இலங்கைத் திருநாட்டின் சர்வசாதாரணமான நிலைப்பாடாகப் பதியப்பட்டுள்ள உண்மை நிலவரம்.

இத்தகைய பேரினவாதச் சித்தாந்தத்தின் அடிப்படையிலேயே, கடந்த 1983 இல், பல்கலைக்கழக அனுமதிக்கான, தரப்படுத்தல் நடவடிக்கையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஈடுபட்டிருந்த வேளையில், இதனை எதிர்த்து மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதும், அரசுக்கும் மாணவ சமூகத்திற்குமிடையில் முறுகல் நிலை மை ஏற்பட்டதும், வரலாறு எமக்குத் தந்த பாடங்கள்.

இந்தப் பின்னணியிலேயே நவம்பர் 27ஆம், 28ஆம் திகதிகளில், யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் 11 பேர் இராணுவத்தினராலும், பொலிசாரினாலும் சுற்றிவளைக்கப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு இவர்களில் 7 பேர் மாத்திரம், வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். இதே அடிப்படையில் கைது செய்யப்பட்ட வி.பவானந்தன், ப.தர்ஷானந்த், க.ஜெனமே ஜெயந்த், எஸ்.சொலமன் ஆகியமீதி 4 பேரும், தன்னிச்சையாகவே சரணடைந்தனர் என பலாத்காரமாகப் பெற்ற வாக்குமூலத்தின் அடிப்படையில், வெலிக்கந்தைப் புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்கைதுகள் தொடர்பாக, எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும், உண்ணாவிரதப் போராட்டங்களும், பல்வேறு தரப்பட்ட அரசியல் கட்சிகளாலும், மாணவர் அமைப்புக்களாலும், பொதுமக்களாலும் அரசுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வருகினறன.

இதேவேளை கைது செய்யப்பட்டு புனர்வாழ் முகாமில்த் தடுத்து வைக்கப்பட்டுள்ள, குறித்த நான்கு மணவரகளும், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் கொள்கைகளையே, தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகின்றனர். இவர்கள் இந்நடவடிக்கையைக் கைவிடும் வரையில், இவர்களின் விடுதலை என்பது சாத்தியமல்ல என, யாழ். மாவட்ட இராணுவத்தளபதி மஹிந்த ஹத்துருசிங்க தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்களின் பெற்றோர் மற்றும் யாழ். பல்கலை. நிர்வாகத்தினருடனான கலந்துரையாடலின் போது திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.


இவ்வாறு முறுகல் நிலைமைகளில், சென்று கொண்டிருக்கின்ற யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் கைது விடயம் தொடர்பாக, சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும், ஒரு சாதகமான நெகிழ்வுத்தன்மையை நோக்கி இவ் விடயத்தை முன்நகர்த்துவதுடாகவே, ஒரு அமைதி நிலையைத் தோற்றுவிக்க முடியும். இதனுடா கவே எமது இலங்கைத் திருநாட்டில், இனங்களுக்கிடையில் நிரந்தரமான புரிந்துணர்வையும், அமைதியையும் தோற்றுவிக்க முடியும். என்பதைசம்பந்தப்பட்டதரப்பினர் அனைவரும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

# யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் கைது தொடர்பாக, சிறுகைத்தொழில் துறை அமைச்சர், கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்கள், எமது தினப்புயல் பத்திரிகைக்கு வழங்கிய விசேட செவ்வி...

**கேள்வி** :- யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கைது தொடர்பாகவும், படையினரின் அச்சுறுத்துல் தொடர்பாகவும் நீங்கள் என்ன கருத்தை முன்வைக்க விரும்புகின்றீர்கள். இதன் பின்னணி என்ன?

**பதில்** :- என்னைப் பொறுத்தவரையில், இது ஒரு பின்னணி என்று கூறமுடியாது. காரணம் இது ஒரு சட்டவிரோத செயல் என்றே நான் கருதுகிறேன். ஏன் என்றால் கார்த்திகை 27 எனின், இறந்தவர்களை நினைவு கூறுவதாயின், வீடுகளில் தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தலாம். ஆனால் பொது இடங்களில், அதுவும் அரசாங்கத்தினால் இப்படியான ஒரு கட்டுப்பாடு இருக்க இப்படி நடந்துகொள்வது என்பது, விசர்நாய் நிற்கிறது என்று தெரிந்தும், வேண்டும் என்று போய் கடிவாங்குவது போல தான், நான் இதனைக் கருதுகிறேன். இது ஒரு சமுகவிரோத செயலும் கூட.

**கேள்வி** :- பல்கலைக்கழகமாணவர்களின், 27-11-2002 தொடக்கம் 30-11-2002 வரை நடைபெற்ற, மாவீரர் விளக்கு



ஏற்றல் ஆர்ப்பாட்டங்கள், ஒரு சட்டவிரோத செயல் என்று கூறுகிறீர்களா?

**பதில்** :- நான் அடிக்கடி சொல்லிக்கொள்ளும் ஒரு விடயம் என்னவென்றால், சவப்பெட்டி கடைக்காரன், காலையில் எழும்பும் போதும் யோசிப்பான். மாலையில் உறங்கும்போதும் யோசிப்பான். காலையில் யாரும் செத்தால்தான், எனக்கு வியாபாரம் நடக்கும் என்று, அதேபோன்று சில அரசியல்வாதிகளும், சில தமிழ் ஊடகங்களும், தமிழர்களுடைய பிரச்சனையை தீராப்பிரச்சனை ஆக்கவேண்டும். பிரச்சனைகளை தீர்க்கக்கூடாது என்று கருதுகின்றனர்.

இல்லாவிட்டால், எத்தனையோ வாய்ப்புக்கள் கிடைத்தன. அத்தனை வாய்ப்புக்களையும் சாதகமாக பயன்படுத்திக் கொள்ள இந்த தமிழ் அரசியல்வாதிகளுக்கு, பிரபாகரனின் போராட்ட நகர்வுகள் இடம் கொடுக்காமல் போய்விட்டது. அதாவது புண்ணுக்கு வலியா, மருந்துக்கு வலியா என்று பார்க்குமிடத்து, மருந்துக்கு வலிதான் என்று, அரசியல் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். தமது தனிப்பட்ட அரசியலை தக்கவைத்துக் கொள்வதற்காக செயற்படுகின்றார்கள்.

இருவகையான பிரச்சனைகள் உண்டு. சட்டவிரோத சமூக விரோத செயல்கள், இரண்டாவது அரசியல் காரணங்கள், அதாவது 12000 பேர் புனர்வாழ்வு பெற்று திரும்பி உள்ளார்கள் இந்த நிலையில் மீண்டும் இவர்கள், பயங்கரவாதச் செயலில் ஈடுபடுகின்றமையைத் தடுப்பதற்காகவே, இவ்வாறான சம்பவங்கள் ஆங்காங்கே நடைபெற்று வருகிறதே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

## நேர்காணல்:- இரணியன்

**கேள்வி** :- மீண்டும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், சொல்வதற்கு தயக்கமாக இருக்கிறார்கள். இதனை நீங்கள் எவ்வாறான கண்ணோட்டத்தில் பார்க்கிறீர்கள்?

**பதில்** :- அப்படி அல்ல முக்கியமாக ஒருவிடையத்தைக் கவனிக்க வேண்டும். யுத்த காலத்தில், இராணுவம் பல்கலைக்கழகத்தைச் சுற்றியும் குவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது நிலைமை அவ்வாறு இல்லை. ஆனால் முன்பு இருந்தது போல், கடுமையான நிலவரத்தை தனிப்பட்ட காரணங்களுக்காக ஒருசிலர் வேண்டும். என்று செய்ய முற்படுகிறார்கள். மாணவர்கள் மாணவர்களாகவே செயற்பட்டால், இவ்வாறான நிலமைகளில் இருந்து விடுபடலாம்.

**கேள்வி** :- அன்று தொடக்கம் இன்றுவரை, பல்கலைக்கழக மாணவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வந்த வரலாறுகளே கூடுதலாக பதிவாகி உள்ளன. இது தொடர்பில் என்ன கூறவிரும்புகறீர்கள்?

**பதில்** :- நான் நினைக்கிறேன், இந்திய, இலங்கை ஒப்பந்தத்தைச் சரிவரப் புலிகள் கையாண்டிருந்தால், இவ்வாறான ஒருநிலை ஏற்பட வாய்ப்புக்கள் இல்லாதிருக்கும். அன்று 604 போராளிகளே கொல்லப்பட்டனர். பொதுமக்கள் தவிர இன்று நிலமை மோசமடைந்து பின்னர் தணிந்திருக்கிறது. இதையாவது நாம் சரிவர சீர்செய்து கொள்ளவேண்டும். அதாவது இருக்கும் வாய்ப்பினை நாம், சரியான முறையில் கையாண்டு, அதில் வெற்றிகாணவேண்டும்.

**கேள்வி** :- மாவீரர் தினத்திற்கு விளக்கேற்றியதன் காரணமாக, யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் முறுகல் நிலை உருவாகி உள்ளது. இது தொடர்பில் ?

**பதில்** :- இறந்த உறவுகளுக்கு விளக்கேற்றலாம், ஆனால் மாவீரர்களுக்கு அல்லது அரசாங்கத்தினால் தடைசெய்யப்பட்ட இயக்கங்களுக்கு, விளக்கு ஏற்றி விழா எடுப்பது தவறு, காரணம் ஜே.வி.பி கூட அன்று பல நிகழ்வுகளை இறந்தவர்களுக்காக கொண்டாடியது. இது எவ்வாறான நிலமைகளை உருவாகியது என்பது தொடர்பில், யாவரும் அறிந்த விடயமே.

இங்கு நடந்தது என்னவென்றால், சரவணபவான் உதயன் பணிப்பாளர் பின் அணியில் தான் இவ்வாறான நிகழ்வுகள் நடைபெற்றதாக, நான் அறிந்துகொண்டேன். அப்படியாயின், ஏன் அவர் அவருடைய பத்திரிகை காரியாலயத்தில், அதனை கொண்டாடி இருக்கக் கூடாது. பொது இடத்தில் அதாவது பல்கலைக்கழக சமுதாயத்தை குழப்பி விடுவது என்பது, ஒரு வன்முறையை தோற்றுவிக்கும் விடையாகவே நான் இதனை கருதுகிறேன். ஏன் வில்லங்கத்தை விலைக்கு வாங்கவேண்டும்.

**கேள்வி** :- அப்படியாயின் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு நீங்கள் என்ன கூறவிரும்புகிறீர்கள்?

**பதில்** :- படிப்பு முக்கியம். நீண்ட காலயுத்தம் காரணமாக எமது கல்வி சமுதாயம் சீர்குலைக்கப்பட்டு விட்டது. இதனை நாம் கருத்திற்கொண்டு, மீண்டும் ஒரு வன்முறைக்குச் செல்லாமல், அரசியல் காரணங்களுக்கு துணைபோகாமல், எமது கல்வியே இரு கண்கள் என்ற அடிப்படையில், தமது படிப்பினை தொடர்ந்து செல்ல வேண்டும். அதற்கு நான் மாணவ சமுதாயம் மேலோங்கி வரவும், பெரிதும் பாடுபடுவேன். நான் கூட ஒரு கட்டத்தில் பல்கலைக்கழகம் போகமுடியாத நிலை, காரணம் ஒன்று தரப்படுத்தல் மற்றது, அர சியல் காரணம் 2000 ஆண்டு நான் புனர்வாழ்வு அமைச்சராக இருந்த காலகட்டத்தில், என்னை 300 பல்கலைக்கழக மாணவர்கள் வந்து பார்த்து கலந்துரையாடினார்கள். அப்போது அவர்கள் கூறுவது போல தரப்படுத்தல் சம்பந்தமான விடயத்தை சமநிலைபடுத்திக் கொடுத்தேன்.

காரணம் அப்போது எனக்கு 9 ஆசனங்கள் இருந்தன. 28 வருடங்களுக்கு, முன்பு 71 ஆம் ஆண்டு தரப்படுத்தலை எதிர்த்து போராட்டம் நடத்தினேன். மாணவர் பேரவை, சசிகரன் தலைமையில் சதியான அரசியல் இது செவ்வனவே சென்றிருந்தால், இவ்வாறான தரப்படுத்தல், 28 வருடங்களுக்கு பின்னரும் நிகழ்ந்திருக்காது.

நான் மாணவர்களுக்கு சொல்ல வேண்டியது, உங்கள் பக்கம் நிஜம் இருக்குமாக இருந்தால், அதை பாதுகாக்கவேண்டியது எனது பொறுப்பு. நான் உங்களைவிட்டு ஓடியதும் கிடையாது. அன்று தொடக்கம் தமிழ் மக்களுக்காக, என்னால் இயலுமான உதவிகளைச் செய்தும் வருகிறேன். இனியும் செய்வேன்.

**கேள்வி** :- யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் கல்வியைச் சீர்குலைக்கும் வகையில்த் தான் இவ்வாறான சதி நடவடிக்கைகள், மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இது உண்மைதானா?

**பதில்** :- அவ்வாறு சீர்குலைக்கும் நடவடிக்கை, அரசாங்கத்துக்கு இல்லை. அவ்வாறான நிலைமை ஏற்பட்டிருக்குமாயின், நான் களத்தில் இறங்கி மாணவ சமுதாயத்திற்காக பாடுபடுவேன். மாணவர்கள் ஐயம் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

# சிறிலங்கா அரசு வன்னிப்போரை வெற்றிகொண்டது எவ்வாறு? பாதுகாப்புச் செயலர் கோத்தபாய.

சென்றவாரத்தொடர்ச்சி....



காவல்துறை உள்ளிட்ட நாட்டினது பல்வேறுபட்ட படைக்கட்டமைப்புக்களுக்கு, வெறும் 800 பேரையாவது, புதிதாக இணைத்துக்கொள்ள முடியாததொரு நிலைமை, அப்போதிருந்தது. முப்படைகளின் தளபதி என்ற வகையில், அதிபரின் அனுமதியின்றி நாங்கள் ஒருவரைக்கூட, புதிதாகப் படையில் இணைக்க முடியாது. இராணுவத்திற்கு இருக்கும் ஆட்பற்றாக்குறையினைச் சுட்டிக்காட்டிய போது, புதிய ஆட்திரட்டல்களை மேற்கொள்வதற்கான அனுமதியினை அதிபர் ராஜபக்ச வழங்கினார்.

அத்துடன் இராணுவ வீரர்கள் என்றால், தவறானதொரு பார்வையே மக்கள் மத்தியில் இருந்தது. படையில் இணைந்தால் மரணமடைந்துவிடுவோம், அல்லது உடலுறுப்பிழந்தவர்களாக ஆகிவிடுவோம் என்ற எண்ணம், மக்கள் மத்தியில் மேலோங்கிக் காணப்பட்டது. படையிலிணைந்தால் மரணமடைந்துவிடுவாய், அல்லது உடலுறுப்பிழந்தவராய் முடக்கப்பட்டு விடுவாய் என்பதைக்காட்டும் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டதும், இது தொடர்பான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டதும்தான் இதற்குக் காரணம்.

எவ்வாறிருப்பினும் இளைஞர்களின் சிந்தனைப்போக்கினை, மாற்றும் வகையிலும், அவர்கள் படையில் இணைவதைத்தூண்டும் வகையிலான, சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்களை, நாங்கள் முன்னெடுத்தோம். இது எங்களுக்குப் பெருவெற்றியினைத்தந்தது. ஒவ்வொரு முறையும் படைக்கு ஆட்திரட்டும் போது, ஆயிரக்கணக்கானவர்கள் இணைந்துகொண்டார்கள். என்கிறார் கோத்தா. நாட்டினது படைக்கட்டமைப்பின் எண்ணிக்கையினை அதிகரிப்பதுடன் மாத்திரம் நின்றுவிடாது, படையினருக்கான நல்வாழ்வுத்திட்டங்களை மேம்படுத்துவது என்ற முடிவும், அப்போது எடுக்கப்பட்டிருந்தது.

சரியான திட்டமிடல், மற்றும் காத்திரமான நடவடிக்கைகள் ஊடாக, நாட்டினதுபடைத்துறைசார் வல்லமைகள், மற்றும் படைப்பலம் தொடர்பாகத் தொடுக்கப்பட்ட, உளவியல்ப் போரினை நாம் முறியடித்தோம். அத்துடன் கீழ்மட்டத்திலுள்ள படையினருக்குத், தங்களது பணி தொடர்பான, சரியான விளக்கத்தினைக் கொடுத்து, அவர்களை போருக்குத் தயார்படுத்தவேண்டியதும், அவசியமானதொரு பணியாக இருந்தது. படைவீரர்களின் நல்வாழ்வுத் திட்டங்களை, மேம்படுத்தும் வகையிலான, பல செயற்பாடுகள், முன்னெடுக்கப்பட்டன. படையினரின் தேவைகளை, மக்களின் கவனத்திற்குக் கொண்டுவரும் வகையில், பல பரப்புரைகளும் முன்னெடுக்கப்பட்டன.

போரில் மூர்க்கமுடன் போரிட்டுக்கொண்டிருந்த, படையினரின் நலன்களைக் கவனிப்பது, மிகவும் முதன்மையான பணியாக இருந்தது. உதாரணமாக வன்னியில் போர் தீவிரமடைந்தபோது, களமுனைகள் பெரும்பாலும், வெள்ளத்தின் மத்தியிலேயே இருந்தன. படைவீரர்கள் கொண்டு சென்ற மேலதிக சீருடைகள், நனைந்துவிட்ட நிலையில், தங்களது சீருடைகளை மாற்றக்கூட முடியாத நிலையிலேயே அவர்கள் இருந்தார்கள். இதனைத் தொடர்ந்து படையினர், தங்களது சீருடைகளை வேகமாக உலர்த்தும் வகையில், ஒருதொகை மின் விசிறிகளை நாங்கள் களமுனைக்கு அனுப்பிவைத்தோம்.



எது எவ்வாறிருப்பினும், விடுதலைப்புலிகளுக்கு எதிரான இறுதிப்போர், எந்தவிதப் பிரச்சினைகளும் இன்றி, இடம்பெறவில்லை என்பதே உண்மை என்கிறார் கோத்தபாயா. தவறுகள், எதிர்பார்க்காத தோல்விகள் மற்றும் பிரச்சினைகளையும் படையினர் சந்தித்திருந்தார்கள் என்கிறார் அவர்.

தவறுகள் இடம்பெறும போதெல்லாம், அதனைத் திருத்திக்கொண்டு, மீளவும் அதே தவறு இடம்பெறாமல் பார்த்தவாறு, படை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. உதாரணமாக, விடுதலைப்புலிகள் வான் வழித்தாக்குதல்களை நடாத்தக்கூடும், என நாம் சந்தேகித்ததோடு, அதனை முறியடிக்கும் வகையில் உசார் நிலையில் இருந்தோம். விடுதலைப்புலிகளின் வான்வழித்தாக்குதல்களை, முறியடிக்கும் பலம், விமானப்படையினரிடம் இருக்கிறது என்ற கருத்தையே அப்போதைய விமானப்படைத் தளபதியும் கொண்டிருந்தார்.

எவ்வாறிருப்பினும் விடுதலைப்புலிகளின், முதலாவது வான் வழித் தாக்குதல் இடம்பெற்றபின்னர்தான், தாழ்வாகப்பறந்து தாக்குதலை நடாத்தும் விமானங்களை, முறியடிக்கும் திறன் எங்களிடம் இல்லை என்பதை, நாம் விளங்கிக்கொண்டோம். இந்த உண்மையினை நாங்கள் தெரிந்து கொண்டவுடன், தாழ்வாகப் பறக்கும் எதிரி விமானங்களை, இலக்குவைப்பதற்கு ஏதுவாக, தாக்குதல் அபாயம் இருந்த பகுதிகளில், விமான எதிர்ப்புப் பீரங்கிகளை நிலைப்படுத்தினோம், என்கிறார் அவர்.

இதுபோன்ற இன்னொரு சம்பவத்தினையும் கோத்தபாய விபரித்தார். படை நடவடிக்கை ஒன்று, அதன் இறுதிக்கட்டத்தினை நெருங்கும் போது, இந்திய அரசாங்கத்திடமிருந்து, எழும் அழுத்தங்களின் விளைவாகக் குறிப்பிட்ட படை நடவடிக்கைகளை, நாம் பலமுறை கைவிட்டிருக்கிறோம். உதாரணமாக, இந்தியாவின் தலையீட்டினைத் தொடர்ந்துதான், வடமராட்சி மீது முன்னெடுக்கப்பட்ட படை நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டது. ஆதலினால் இம்முறை இந்தியாவுடன் சிறந்த உறவினைப் பேணும் அதேநேரம், அவர்களது இதுபோன்ற அழுத்தங்களுக்குப் பணிந்து கொடுப்பதில்லை என்ற நிலைப்பாட்டினை நாம் எடுத்திருந்தோம்.

ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் இந்தியா போன்ற நாடுகளின், அழுத்தங்களுக்குப் பணிந்து கொண்டு, புலிகள் தங்களை மீளொழுங்கு படுத்துவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்கக்கூடாது என்பதில், நாங்கள் மிக உறுதியுடன் இருந்தோம். சிறிலங்காவினது அரசியல் நிலைமைகள், தமிழ்நாட்டின் மீது அதிக செல்வாக்கினைச் செலுத்தும் என்பதாலேயே, இந்தியா தலையிட முனைந்தது. என்பதே உண்மை. ஆதலினால் நாங்கள் மூவர் அடங்கிய உயர்மட்டக் குழுவொன்றை நியமித்திருந்தோம். பதிலாக இந்திய அரசாங்கம், இந்திய வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட, மூவர் அடங்கிய குழுவொன்றை நியமித்திருந்தது. நாங்கள் முன்னெடுத்த, படை நடவடிக்கைகள் தொடர்பான சந்தேகங்கள், புதுடெல்லிக்கு எழுந்தபோதெல்லாம், எங்களது மூவர் அடங்கிய குழு, இந்தியாவினது சிறப்புக் குழுவிற்கு, தெளிவுபடுத்தல்களை மேற்கொண்டன.

தேவையேற்படும் போதெல்லாம், அதிபர் மஹிந்த ராஜபக்சவை அவர்கள் சந்தித்து உரையாடுவதற்கு, வழிசெய்தும் கொடுக்கப்பட்டது. இவ்வாறுதான் நாங்கள் முன்னெடுத்த படை நடவடிக்கைக்கு, புதுடெல்லியின் ஆதரவினைப் பெற்றோம். குழுவாக இணைந்து வேலைசெய்வதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்திக் குறிப்பிட்ட கோத்தா, சிறிலங்கா இராணுவத்தின் குறித்ததொரு படையணியோ, அன்றி படைக்கட்டமைப்போ, இந்த வெற்றிக்குப் பொறுப்பல்ல. பயங்கரவாதிகளை வெல்லுவது, என்ற பொதுவான இலக்கு நோக்கி, ஒவ்வொரு படையினரும், குழுவாக இணைந்து பணிசெய்தார்கள் என்றார்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற சமர்களின்போது, விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றிய பகுதிகளைத் தொடர்ந்தும், தக்கவைக்கமுடியாத நிலையி[ல்] நாமிருந்தோம். எங்களின் இந்தப் பலவீனத்தினை விடுதலைப் புலிகள் நன்கறிவார்கள். எங்களிடமிருந்த இந்தப் பிரச்சினையினை, நாங்கள் சரியாக விளங்கிக்கொண்டோம். நான்காவது கட்ட ஈழப்போரில், இராணுவத்தின் படையணிகள், நிலங்களைக் கைப்பற்றும் போதெல்லாம், அதனைப் பாதுகாக்கும் பொறுப்பினை கடற்படை, விமானப்படை, காவல்த்துறை மற்றும் சிவில் படைப்பிரிவு ஆகிய அணிகளுக்கு வழங்கினோம். காவல்த்துறையினர் இதுபோல முழு ஈடுபாட்டுடன் செயற்பட்டிருக்காவிட்டால், விளைவுகள் மோசமானதாக இருந்திருக்கும் என்பது உண்மை.



இலங்கைத் திருநாட்டினை உலகின் சிறந்ததொரு இடத்தில் வைப்பதற்காக, அரியதொரு சந்தர்ப்பம் தற்போது எங்களுக்குக் கிடைத்திருக்கிறது என்கிறார் கோத்தபாயா. போரினை வென்றுகொடுப்பதில், நாங்கள் சந்தித்து நின்ற இமாலய இடர்கள், மற்றும் எங்களது படைவீரர்கள் புரிந்த அதியுச்ச தியாகம் என்பவற்றுடன் ஒப்பிடும்போது, நாட்டினை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்வது, ஒன்றும் கடினமான பணியன்று. ஆதலினால், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், நாம் அனைவரும், கட்டுக்கோப்புடனும், சுய ஒழுக்கத்துடனும் செயலாற்றுவதோடு, இந்தத் தேசத்திற்கு எங்களால் முடிந்த, பங்களிப்பினைச் செய்யவேண்டும். அப்போதுதான், கடந்தகாலத்தில் நாங்கள் இழந்தது எதுவோ, அதனை எங்களால் மீளவும் பெறமுடியும், என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய தெரிவித்தார்.

- முற்றும் -

இரணியன்-

## 02ஆம் பக்கத் தொடர்ச்சி...

சந்திப்பதற்கான, அழைப்பினை விடுத்து இருந்தது. அமிர்தலிங்கம் தலைமையில், “தமிழ் ஈழத்தினை” இந்திய அரசு கோர உள்ளதாக, புலிகளுக்கு பிரேமதாசாவினால் தகவல் கொடுக்கப்பட்டது. ஒரு வேளை இலங்கை அரசினைப் பயமுறுத்துவதற்காக, இந்தியா இவ்வகையான ஒரு செய்தியை, கொழும்பு வட்டாரத்தில் கசிய விட்டிருக்கக்கூடும். அமீர் அவர்களை வைத்து, தமிழ் ஈழத்தினைக் கோரினாலோ அல்லது வட கிழக்கின் முதல்வராக்கினாலோ, அது சர்வதேச அரங்கில் அங்கீகாரம் பெற்றது போன்று ஆகிவிடும், என்பதினை அறிந்த பிரபாகரன், தனது உறுப்பினர்களை அனுப்பி அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரைக் கொலை செய்தார்.

தனக்குத் தலைமை கிட்டாவிட்டால், தமிழினத்திற்கு உரிய தீர்வாக இருந்தாலும், அதனை நாசப்படுத்தும் செயல்களைப் பிரபாகரன் பல தடைவைகள் செய்திருந்தார். தமிழர்களுக்கு கிடைக்க இருந்த ஒரு அரிய வாய்ப்பு, அன்று அமிர்தலிங்கத்தோடு இல்லாமல் போனது. பிரபாகரன் ஒரு சிங்களத் தலைவரின் தூண்டுதலில், தமிழ் தலைவரான அமிர்தலிங்கத்தைக் கொலை செய்தார். என்பதினை “தமிழ் வின்” ஆய்வாளர் அறிந்து கொள்ளவேண்டும்.

தமிழ் ஈழம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே, இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியினைக் கொலை செய்வதற்கு, பிரபாகரன் உத்தரவிட்டு இருந்தார். ஆயுத ஆசை, பண ஆசைக்கு இணங்கி, சர்வதேச உளவுத்துறையினரின் வலைக்குள் சிக்கியே, ராஜீவ் காந்தியை பிரபாகரன் கொலை செய்து இருந்தார் என தற்போது செய்திகள் வெளிவருகின்றன.

தமிழ் அமைப்புகளின் தலைவர்களை மட்டும் அல்லாது, அமைப்புக்களின் இரண்டாம் கட்ட உறுப்பினர்களென, ஆயிரக்கணக்கான சகோதரப் படுகொலைகளை பிரபாகரன் புரிந்ததோடு புலிகள் அமைப்புக்குள்ளே இருந்த இரண்டாம் கட்டத் தலைவர்களான மாத்தையா, பதுமன் போன்றோரையும் கொன்றொழித்துள்ளார் பிரபாகரன்.

சகோதர யுத்தத்தில், நாம் வன்னிக்குள் மோதுண்டு ஆயிரக்கணக்கான உறுப்பினர்களையும் இழந்தோம். அதற்கு நானும் உடந்தையாக இருந்துவிட்டேன். என்று கருணா, புலிகளில் இருந்து பிரிந்தபோது லண்டன் ஊடகங்களுக்கு செய்தி வெளியிட்டிருந்தமையை இங்கு நினைவில் கொள்ளலாம். இனப்படுகொலையினைக் காட்டிலும், பிரபாகரன் மேற்கொண்ட சகோதரப் படுகொலையே, ஈழ தமிழனத்தை அதிகமாகப் பலவீனப்படுத்தியது. அரச படைகளினால்க் கொல்லப்பட்ட மாற்று இயக்க போராளிகளைக் காட்டிலும், புலிகளினால் கொல்லப்பட்ட மாற்று இயக்கப் போராளிகளும், தலைவர்களுமே அதிகமாகும் என்பதே உண்மை நிலவரம். இனப்படுகொலை குறித்து இரக்கப்படுபவர்கள் சகோதர இனப் படுகொலை குறித்தும் கவலைப்படவேண்டும் என்பதை அவர்கள் அவ்வவ்போது நினைத்துக் கொள்ளவேண்டும்.

-இரணியன்-

# முற்றுப்பெறாத அரசியல் பிணக்குகளும், மஹிந்த - சம்பந்தன் இழுபறியும்.

சென்றவாரத்தொடர்ச்சி...

இதன் பின்னர், இவ் அறிக்கையை வரவேற்ற ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான, உயர் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, ஏப்ரல் 27, 2011 அன்று, யுத்தக் குற்றங்களுக்கு எதிராக அனைத்துலக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படவேண்டும் என, அறிக்கை வெளியிட்டிருந்தார். ஆனால் இதுவரையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் எதுவும் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை. சிறிலங்கா அரசாங்கம், தருஸ்மன் அறிக்கை முற்றிலும் பொய்யானவை, எனக் கூறி அதை ஏற்க மறுத்துள்ளது. அத்துடன் இந்த அறிக்கையானது சிறிலங்காவில் சமாதானம், பாதுகாப்பு, உறுதித்தன்மை என்பனவற்றை நிலைநிறுத்துவதற்காக, எம்மால் மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளுக்குப் பெரிதும் முட்டுக்கட்டையாக உள்ளது. என சிறிலங்கா அரசாங்கம்



அறிவித்திருந்தது.

சிறிலங்கா பாதுகாப்புப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட, மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்காக, மே. 15,2010 இல் சிறிலங்கா அதிபர் கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை நியமித்தார். இவ் ஆணைக்குழு தனது இறுதி அறிக்கையை, நவம்பர் 20,2011 அன்று சிறிலங்கா அதிபரிடம் கையளித்தது. சிறிலங்கா அதிபரால், தருஸ்மன் அறிக்கை போலல்லாது, நம்பகத்தன்மையான அறிக்கையாக இருக்கும் என, உரிமை கோரிய நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையானது, நாடாளுமன்றில் டிசம்பர் 2011இற்கு முன்னர் முன்வைக்கப்படவேண்டும்.

கடல் கடந்த நாடுகளில், புலிகளால் அவர்களின் ஆதரவாளர்களாலும், மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகள் தொடர்பாக, தொடர்ச்சியாக வெளிவரும் அறிக்கைகள், சிறிலங்கா அரசாங்கத்தின் கவனத்தைத் திருப்பியுள்ளன. சிறிலங்காவின் அரசியல்வாதிகள், இராணுவப் படை அதிகாரிகள், இராஜதந்திரிகள், புலமையாளர்கள் போன்றோர், புலிகளின் செயற்பாடுகள் தொடர்பாக, மீண்டும் மீண்டும் தமது கருத்துக்களை வலியுறுத்தி வருகின்றனர்.

புலிகளின் முதன்மையான ஆதரவு அமைப்புக்களை, பயங்கரவாதப் பட்டியலில் இணைத்துக் கொள்ளுமாறு, ஆகஸ்ட் 01,2011 இல், சிறிலங்கா அரசாங்கம், ஐரோப்பிய ஒன்றியத்திடம் கேட்டுக்கொண்டது. ஐரோப்பிய மற்றும் ஏனைய நாட்டு அதிகாரிகளால், 2010 மற்றும் 2011 காலப்பகுதியில், புலி உறுப்பினர்கள் எனக் கைதுசெய்யப்பட்டவர்கள், பெரும்பாலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், தமிழ் இளையோர் அமைப்பு போன்றவற்றைச் சேர்ந்தவர்கள் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக மே,21,2011 இல், நோர்வேயைத் தளமாகக் கொண்டியங்கும், புலிகள் அணியின் தலைவரான, நெடியான் என அழைக்கப்படும் பேரின்பநாயகம் சிவபரன் என்பவர், நெதர்லாந்து காவற்துறையினரால், கைது செய்யப்பட்டு ஒஸ்லோ, நோர்வேயில் உள்ள நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தார்.



புலம் பெயர் வாழ் தமிழர்கள், தற்போதும் புலிகள் அமைப்பிற்கு நிதி உதவியை மேற்கொண்டு வருவதால், வெளிநாடுகளில் செயற்படும் புலி உறுப்பினர்கள், ஆயுதக் கொள்வனவு களில் தொடர்ச்சியாக ஈடுபடுவதாக, ஆகஸ்ட் 18,2011 இல் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தால், வெளியிடப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டிருந்தது. சிறிலங்காவில் புலிகள் தோற்கடிக்கப் பட்டு, அரச படையினர் வெற்றி பெற்ற போதிலும் கூட, அனைத்துலகத்தில் காணப்படும், விடுதலைப் புலிகளின் நிதிசார் வலைப்பின்னல்கள், தற்போதும் தொடர்ந்து செயற்படுத்தப்படுவதாக, அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதேவேளையில், கிழக்கு மாகாணத்தில் செயற்படும் ஆயுதக் குழுக்கள், தமது ஆயுதங்களை கைளிக்காது விடில், கடினங்களை எதிர்நோக்க வேண்டிவரும் என, சிறிலங்கா இராணுவத்தின் கிழக்கு மாகாணக் கட்டளைத் தளபதி, மேஜர் ஜெனரல் பொனிபேஸ் பெரோரா, யூலை 01,2011 அன்று அறிவித்திருந்தார். பல பத்தாண்டுகளாக இடம்பெற்ற, குருதி தோய்ந்த யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டு, தற்போது நாட்டிற்குள்ளும் வெளியேயும், எஞ்சியுள்ள புலி உறுப்பினர்கள், சிறிலங்காத் தீவின் பாதுகாப்பிற்கும், இறையாண்மைக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்துகின்ற, எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

உண்மையில் பெரும்பான்மை சிங்கள சமூகத்திற்கும், சிறுபான்மை தமிழ் சமூகத்திற்கும் இடையில், நீண்ட காலமாகத் தொடரப்படும் முறுகல் நிலையைத் தவிர்த்து, நாட்டில் அமைதியை நிலைப்படுத்த வேண்டிய, பாரிய சவால் ஒன்று, சிறிலங்கா அரசாங்கத்திற்கு உண்டு. நீண்ட காலமாக இவ்விரு சமூகத்தவர்களும் இடையில், நிலவும் முரண்பாட்டை உடனடியாகத் தீர்ப்பதென்பது, உண்மைக்கு அப்பாற் பட்டதாகும். ஆனால் இதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது, பெரும்பான்மை சிங்கள சமூகத் தலைமையினதும், சிறுபான்மை தமிழ் சமூகத் தலைமையினதும் பொறுப்பாக உள்ளது என்பதே உண்மையானதாகும்.

-ஆகாஷ்-

## 07 ஆம் பக்கத் தொடர்ச்சி

என்ன என்பதற்கான விடைகாணப்பட வேண்டும்.

### புலம்பெயர் தேசத்தில் முன்னெடுக்க வேண்டியவை.

அரசியல் ரீதியாக ஒடுக்கப்பட்டும், பொருளாதர ரீதியாக புறக்கணிக்கப்பட்டும், சமூக அடிப்படையில், குழப்ப நிலையிலுள்ள எமது தாயகத்தை, மீளக்கட்டியெழுப்பவேண்டிய தார்மீகக் கடமை, புலம்பெயர் மக்களிடமே பெரியள வில் தங்கியுள்ளது. யூத இனத்தின் வரலாறு, எமக்கு வழிகாட்டலையும் நம்பிக்கையையும் தந்திருக்கின்றது. ஆனால் கடந்த 2வருடங்களிற்கு மேலாக, விடுதலையை நோக்கிய செயற்பாடுகள் வேகமிழந்துள்ளதுடன், சோர்வுத்தன்மைத் தொடர்ந்த வண்ணம் உள்ளது. இவற்றிலிருந்து விடுபட்டு, நாம் பலம் பொருந்திய இனமாக, ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாத்திரத்தை ஏற்று சரியாகச் செயற்பட வேண்டும்.

*.அரசியல் ரீதியாகப் பலம் பெறுதல்: சர்வதேச நாடுகள், எங்கும் பரந்தும் தமிழினம் அந்தந்த நாட்டு அரசியலில் பங்கு பெறுவதன் மூலம், எமக்கான இடத்தையும் பங்கையும் ஓரளவிற்காவது பெற்றுக்கொள்ளலாம். கால அடிப்படையில், நிச்சயம் எமக்கான பலமாக அது அமையும்.

*.பொருளாதார ரீதியாக பலம் பெறுதல்: பல்வேறு மட்டத்திலான முதலீடுகளும் மூலத்தனத்திட்டங்களும். எங்களுக்கான பலத்தை அதிகரிக்கும். சிறிலங்கா அரசின் காணிப்பறிப்புக்களும், குடியேற்றங்களைத் தடுப்பதற்கும், எமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், எமது பொருளாதார பலம் தான் அடிப்படை.

*.சிறிலங்காவை பலவீனப்படுத்தல்: பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், சிறிலங்காவை பலவீனப்படுத்தும் செயற்பாடுகள் புலம்பெயர் தேசத்தில் முன்னெடுக்கப்படவேண்டும். ஏனெனில், பிராந்தியப் போட்டிகளைச் சாதனமாக்கி, தெளிவாக நகரும் சிங்களத்திற்கு, தற்போது இருக்கும் ஒரே பிரச்சினை, புலம் பெயர் பிரதேசத்தில், எடுக்கப்படும் முன்னெடுப்புக்களை, எவ்வாறு எதிர்கொள்ளலாம். அல்லது சீர்குழைக்கலாம் என்பதுதான்.

*.தாயகத்தை பொருளாதார ரீதியில் பலப்படுத்தல்: தாயகத்தில் கொடிய போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையைச் சீர்படுத்த வேண்டிய பொறுப்பு, புலம்பெயர் சமூகத்திடமே உள்ளது. அரசின் பொறிமுறைக்குள் சிக்காமல், குறிப்பாக அரசின் நிழல்களில் உலாவும், நிறுவணங்களின் பிடிக்குள் சிக்காமல், தனிநபராகவே அன்றி, சிறு அமைப்புக்களாகவோ இணைந்து செயற்பட வேண்டும். மேலான, வாழ்வாதாரம் என்ற எல்லைக்கு அப்பால், தாயகத்தின் பொருண்மிய மேம்பாடு, என்ற இலக்கில் செயற்பாடுகளை முன்



நகர்த்த வேண்டும்.

தாயகத்தில் ஈழ விடுதலையின் கனதியையும், கொள்கை ரீதியான உறுதிப்பாட்டையும், சிங்களத்தின் செயற்பாடுகளே, கொதிநிலையில் எப்போதும் வைத்துக்கொண்டிருக்கும். அந்நேரத்தில் பேரவலத்தின் பின் அந்தச் சமூகத்தை அரசியல், பொருளாதார ரீதியா, தக்க வைக்கும் செயற்பாடுகளைச் செய்யவேண்டிய பெரும் பொறுப்பு, தாயகத்தில் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்போரிடம் தங்கியுள்ளது. தாயகத்துச் சமூகம், பொருளாரத்தில் வலுப்பெற்று நிலைபெறவேண்டும். போரின் விளைவால் அனைத்தையும் இழந்து, எதிலிகளாக நிற்கும் தமிழ் மக்களின் வாழ்வை வலுப்பெற வைப்பதே, இருப்பிற்கான அடிப்படை. விடுதலைக்காகப் போராடும் நிலையை உருவாக்காமல், அரசிடம் கையேந்தாமல் பார்க்க வேண்டிய முக்கிய பொறுப்பு, தாயகத்து அரசியல் தலைமைகளிற்கு உண்டு. கைகொடுக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு, புலம்பெயர் சமூகத்திற்கு உண்டு.

அதேவேளை, முஸ்லிம் சமூகத்துடன் சரியான இணக்கப்பாட்டையும் வளர்க்கவேண்டும். சிங்கள பெருந்தேசிய வாதம், தமிழ் சமூகத்தை மட்டுமல்ல முஸ்லீம் சமூகத்தையும் பலவீனப்படுத்தும் செயற்பாடுகளைச் செய்கின்றது என்பது முஸ்ஸிம் சமூகத்திற்கு தெரியமலில்லை, எனவே தமிழ் பேசும் மக்கள், தாயகத்தில் வலுப்பெற வேண்டும்.

'யுத்தம் என்பது இரத்தம் சிந்தும் அரசியல், அரசியல் என்பது இரத்தம் சிந்தாத போர்முறை'. எனவே அரசியல் தலைமைகள், கனவான் போக்கை விடுத்து, தமக்கான போரை சரிவர நடாத்திச் செல்ல வேண்டும். செயற்பாடு இடைவெளிக் குறைவு என்பது புரிதலுக்குரியது. அதற்கான இடைவெளிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்காக முயற்சிக்க வேண்டும், இது இலகுவான பணியல்ல. இந்தக் கடுமையான பணியை நிறைவேற்றும் போதுதான், தமக்கான இருப்பு இலங்கைத்தீவில் தக்கவைக்கப்படும் என்பதைக், கருத்திற்கொள்ளும் போது, கடினங்கள் பெரிதாக தெரியாது.

சுருக்கமாக, முள்ளிவாய்க்கால் பின்னடைவிலிருந்து, புதிய பரிமாணங்களில் கட்டியெழுப்ப வேண்டிய, விடுதலைப்பயணத்தின் முக்கிய பணியாக, புலம் பெயர் தேசத்தில், அங்கீகாரத்திற்கும் நிலைபடுத்தலுக்குமான நடவடிக்கை களும், அதேவேளை தாயகத்தில் எம்மை சகல வழிகளிலும் தக்க வைக்கும் நடவடிக்கைகளும், முஸ்லீம் சமூகத்துடனான இணக்கப் பாட்டை பேணும் நடவடிக்கைகளும், ஏககாலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும். இவற்றினூடாகவே இலங்கைத்தீவில் இருக்கும் தமிழ் பேசும் மக்களின் இருப்பு பூமிப்பந்தில் பேணப்படும்.

தற்போதைய நவீன உலக ஒழுங்கில், எமக்கான அரசியல் விடுதலைக்கான உத்தியை வகுத்து, சர்வதேச ஜனநாயக மரபுகளைப் பேணி, அனைத்துலக ஆதரவைப் பெறுவதற்கான இராஜதந்திர முயற்சிகளைச் செய்யும் அதேவேளை, ஈழத்தமிழர்களிற்கான, தனித்துவமான பலத்தையும் கட்டியெழுப்பவேண்டும். போரில் கொல்லப்பட்ட பல லட்சகணக்கான மக்களையும், நினைவில் நிறுத்தி எமக்கான விடுதலையை, வென்றெடுக்கத் தொடர்ந்து நம்பிக்கையுடன் பாடுபடுவோம்.

முற்றும்.

- நெற்றிப்பொறியன்-

# தீர்க்க தரிசி தந்தை செல்வாவின் தலைமைப்பேருரை...



1948ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலே, தமது நம்பிக்கைக்கு பாத்திரமாயிருந்த தலைவர் சரணடைந்ததும், தமிழ்க் காங்கிரசிற் பிளவு ஏற்பட்ட போது, தமிழ் பேசும் மக்கள் திக்கற்றவர்களாய் தவிக்கலாயினர். அரசியல் வாழ்விலே, தமது நிலையையிட்டு திருப்தி கொள்ளாதவர்களாய் அவர்கள் இருந்த போதிலும், இந்நிலையை மாற்ற, வழி காணாதவர்களாய் திகைத்தனர். தமிழ் பேசும் மக்களுக்கென ஒரு சுதந்திர அரசினை நிறுவுவதன் மூலம், இப்பிரச்சினையைத் தீர்க்கலாம் எனப் புது எண்ணம், மக்களின் மனதைப் பெரிதும் கவரவில்லை. இப்படியான இயக்கத்துக்கு நாட்டிலே எவ்வளவு ஆதரவு இருக்கும் என, அவர்கள் திடமாக அறிந்து கொள்ளவில்லை. ஆனால், அவர்களிடையே இவ்விதமாக இப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று நம்பிய வீரர்களும், தீர்க்கதரிசிகளும் இருந்தார்கள். இந்த வீரர்கள் இடைவிடாது தமது நம்பிக்கையிருக்கும் கொள்கையை பிரச்சாரம் செய்து கொண்டு வந்தப்படியால், இன்று, தமிழ் பேசும் மக்கள் எல்லோருக்குமே, சுதந்திர தமிழ் அரசு ஒன்றினை நிறுவ வேண்டும் எனும் கொள்கையில், நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. பெருந்தொகையினராக நீங்கள், இங்கு வந்து இன்று குழுமி இருப்பது, இதற்குப் போதிய சான்றாகும்.

இப்படியான எண்ணத்தில் நம்பிக்கை மாத்திரம் இருந்தாற்போதாது; அதை நடைமுறையில் கொண்டுவரவேண்டும். எமது கனவை நனவாக்குவதே எமது இயக்கத்தின் அடுத்த திட்டமாகும். இவ்விஷயத்திலே பலரும் சந்தேகமுறுகின்றனர். துரதிஷ்ட வசமாக, எமது சமீப காலத்தில் அரசியல் வரலாறு இச் சந்தேகத்துக்கு இடமளிப்பதாயிருக்கின்றது. பல் முறைகளில் தலைவரென்போர், எங்களைக் காட்டிக் கொடுத்துவிட்டார்கள். வீரர்களாகக் காட்சியளித்து, மக்களின் நம்பிக்கையைப் பெற்ற தலைவர்கள், ஒருநாள் நிமிர்ந்து நின்று போராடி, மறுநாள் களத்தையே விட்டு ஓடினர். 1934ஆம் ஆண்டு தொடக்கமாக, சேர் மகாதேவா அவர்கள் தமிழ்ப்படையின் முன்னணியில் நின்றார்; அவருடைய உற்சாகம் படிப்படியாகக் குறைந்து, ஈற்றில் அவர் எதிரிகளின் கட்சியிற் சேர்ந்தார். இப்படியே திருவாளர்கள் நடேசன், தியாக ராசா ஆகிபோகும் தமிழர்களின் உரிமைக்காக உழைப்பவர்களாயிருந்து, கடைசியில் 1945ஆம் ஆண்டிலே, தமிழ் மக்கள் பல ஆண்டுகளாகப் போராடி வந்த உரிமை-களை, மறுக்கும் அரசியற்றிட்டத்திற்குச் சார்பாக வாக்களித்தார்கள்.

அண்மையிலே, நம் உரிமைகளுக்காக விட்டுக்கொடுக்காது போராடிவந்த, திரு.ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள், இப்பொழுது போராட்டத்தைக் கைவிட்டது மாத்திரமன்றி, இலங்கைத் தமிழ் மக்களுக்கு, எவ்வித குறையுமில்லை என்று, எங்கும் பறைசாற்றி வருகிறார்! இப்படியான குட்டிக் காரணங்களின் பலனாக, தமிழ் இனத்தின் பண்புக்கே பழுது வந்தடைந்ததுடன், இப்போதுள்ள தமிழ்த்தலைவர்களிலும், எதிர் காலத்திலே தோன்றக்கூடிய தலைவர்களிலும், மக்களுக்கு நம்பிக்கை இல்லாமற் போய்விட்டது. ''இப்போது சுதந்திரத் தமிழ் அரசு வேண்டுமென்று கோரும் தலைவர்கள், செய்ததைப்போல, இத் தலைவர்களும் செய்ய மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் உண்டு'' என்று வினவுகின்றார்கள்: இவை சரியான கேள்விகளேயாகும்.

தமிழ்த் தலைவர்களது மனவருத்தத்தைத் தரும், நிலையற்ற போக்குடன், எம் பொதுமக்கள் அரசியல் விஷயங்களிற் காட்டிய, விடாப்பிடியான உறுதியை ஒப்பிட்டுப் பார்த்தால், எவ்வளவு வித்தியாசம் தென்படுகிறது? மக்களின் மனவுறுதி சாந்தி அளிப்பதாயிருக்கின்றது. இதனைத் தெளிவாக உங்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் எல்லாப், பிரிவினருள்ளும் தமிழ் விடுதலைக்காக உழைக்கக்கூடிய, வசதி வடமாகாண மக்களுக்கே இருந்தது. அவர்கள், இலகுவாகப் பிரிக்கப்படக்கூடிய பிரதேசத்தில் பெருந்தொகையினராக வாழ்ந்திருந்தது மாத்திரமன்றி, அவர்களிடையே சிங்கள மக்கள் கலந்து வாழ்வதும் குறைவாக இருந்தது. அவர்களே ஆங்கிலக் கல்வியினாலும் அதிக பயன் பெற்றிருந்தனர். ஆனபடியால், இலங்கைவாழ் தமிழ் இனத்துக்காகத் தொண்டு செய்யும் பொறுப்பு, பெரும்பாலும் அவர்களைச் சார்ந்திருந்தது. தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காக, நடைப்பெற்ற அரசியற் கிளர்ச்சிகள், பெரிதும் வடமாகாணத்திலேயே ஆரம்பித்தன. வடமாகாணத்தினருக்குக் கூடுதலான வசதிகளிருந்தமையால், இக்கடமை அவர்களையே சார்ந்தது. யான் இனிக் கூறப்போகும் அரசியற் கிளர்ச்சிகள், பெரும்பாலும் அவர்களாலேயே நடத்தப்பட்டன. ஆயினும் தமிழ் பேசும் மக்கள் எல்லோரினதும் சுதந்திர உணர்ச்சிக்கு அவை எடுத்துக்காட்டாகும். சிறுபான்மையினருக்குப் பாதுகாப் பேயில்லாது, இந்நாட்டுக்கு ஓரளவு சுயாட்சி வழங்கிய, முதல் அரசியற்றிட்டம் டொனமூர் திட்டமேயாகும். டொனமூர் அரசியற்றிட்டத்தின் கீழ், நடைப்பெற்ற முதற் பொதுத்தேர்தலை யாழ்ப்பாண மக்கள் பகிஷகரித்து விட்டனர்.

தொடரும்...

-தொகுப்பு இளையபாரதி-

# வீரன் யார், மகா வீரன் யார்?

16-12-2012 இன் தொடர்ச்சி...

தமிழ் நீதித்துறையின் நீதியாளர், சட்டவாளர்களின் சத்தியப் பிரமாணம்.

1993 ஆவணி 19இல், தமிழீழ நீதித்துறையின் நீதியாளர்,




சட்டவாளர் ஆகியோரின் சத்தியப் பிரமாண வைபவத்தில், பிரபாகரன் ஆற்றிய சொற்பொழிவில், போராளிகள் நீதியாளர்களாகவும், சட்டவாளர் களா-கவும் பொறுப்பை ஏற்றால், தமது பிரச்சினைகளை நேர்மையாக அணுகி, சரியான முறையில், நீதி வழங்குவார்கள் என, எமது மக்கள் எதிர்பார்க்கிறார்கள். போராளிகள் ஒரு உன்னத குறிக்கோளுக்காக, தமது உயிரையும் துறக்கத் தயாராகவுள்ள ஒரு இலட்சியவாதிகள் என்பதை பொதுமக்கள் நன்கு அறிவார்கள். எனவே போராளி களாகிய நீங்கள், நீதி நிர்வாகத்தைப் பொறுப்பேற்கும் பொழுது, மக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில், நீங்கள் நேர்மையுடனும் பொறுப் புணர்வுடனும் செயலாற்றுவீர்கள் என நம்புகிறேன். கற்றது கைமண் அளவு, கல்லாதது உலகளவு என்பார்கள். இந்த உண்மையின் அடிப்படையில், நீங்கள் உலக அனுபவித்திலிருந்து நிறையக்கற்றுக்கொள்ள முயல வேண்டும். அனுபவம் மூலமாகவே, நீங்கள் நிறைந்த அறிவைப் பெற்றுக் கொள்ளலாம். மக்களின் உணர்வுகளைப் புரிந்து, அவர்களின் முரண்பாடுகளைக் களைந்து, அவர்களுக்கு நீதி வழங்குவதை, உங்கள் கடமையாகக் கொள்ள வேண்டும். நேர்மையாகவும் உண்மையாகவும் செயற்படுவதில், பல சிக்கல்கள் இருக்கத்தான் செய்யும். ஆனால் எப்போதும் நேர்மை தவறாது, சத்தியத்தின் வழியில், நீங்களும் உங்களது கடமையைச் செய்ய வேண்டும். அதற்கான உறுதியும் துணிவும் உங்களிடம் இருக்க வேண்டும் என்றார்.

காந்தரூபன் அறிவுச்சோலை

1993 கார்த்திகை 13ஆம் நாள், காந்தரூபன் அறிவுச்சோலை, பிரபாகரன் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட போது, அவர் ஆற்றிய உரையில், எல்லோருக்கும் பொது அன்னையான தமிழ் அன்னை, இந்தச் சிறுவர்களைத் தாயாக அரவணைத்திருக்கிறாள். எமது போராளிகள் அனைவருமே, இவர்களது சகோதரர்கள். எமது இயக்கம் என்னும் மாபெரும் குடும்பத்தில், இவர்கள் இணைபிரியாத அங்கமாக இணைந்துள்ளனர். தனிக்குடும்பம், அந்தக் குடும்பத்தைச் சுற்றி உறவுகள் என்ற, வரையறுக்கப்பட்ட வரம்புகளுக்கு அப்பால், ஒரு பரந்த வாழ்வையும், விரிந்த உறவுகளையும் வைத்துக் கொண்டு, வளரப்போகும் இவர்கள், எதிர்காலத்தில், எமது தேசத்தின் சிற்பிகளாகத் திகழ்வார்கள் என்பது திண்ணம். இந்தச் சமூகச் சூழலில், இவர்களிடம் மண்பற்றும், மக்கள் பற்றும் ஆழமாக வேரூன்றி நிற்கும்.



ஆனால் இத்தகைய சமூக சேவைகள் வெற்றி பெற, சமுதாயம் தனது ஆக்க பூர்வமான உதவிகளை மனப்பூர்வமாக வழங்கவேண்டும் என்று கூறினார்.

குறிப்பு - பெற்றோரை இழந்து, யாரும் அற்ற நிலையில், விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்ந்த காந்தரூபன் என்ற இளைஞன், தானே விரும்பி தலைவரிடம் கேட்டு, கரும்புலியாய்ச் சென்று, வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இம்மாவீரன் பிரபாகரனிடம், ''யாரும் அற்றவனாக வாழ்ந்த என்னை, விடுதலைப்புலிகள் என்னும் குடும்பத்தில் இணைத்து, ஆளாக்கியதைப்போல், தமிழீழத்தில் அனாதைகளாக வாழும் பிள்ளைகளை இணைத்து, அவர்களை அனாதைகள் என்ற நிலையில் இருந்து மீட்கவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார். அந்த மாவீரனின் ஆசையை நிறைவேற்றும் முகமாக, “காந்தரூபன் அறிவுச்சோலை” என இதற்குப் பெயரிடப்பட்டது.



இலங்கைத் தீவில் நிரந்தரமான சமாதானம்.

1994 புரட்டாதி 13ஆம் நாள், இலண்டன் பி.பி.சியின், தமிழ் சேவையின் சார்பில், திருமதி.ஆனந்தி என்ற நிரூபர், பிரபாகரனைப் பேட்டி கண்டபோது, பேச்சுவார்த்தைகள் ஒரு சுமூகமான சூழ்நிலையில், ஒரு சமாதானமான சூழ்நிலையில், நடைபெறுவதையே நாம் விரும்புகிறோம். ஒரு சுமூகமான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கு, ஸ்ரீலங்கா அரசுதான், உருப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சாதாரண சிங்களமக்கள் போரை விரும்பவில்லை. சமாதானத்தையே விரும்புகிறார்கள் என்பது, எமக்கு நன்கு தெரியும். இந்தத் தேர்தல் முடிவுகளும், அதனையே நிரூபித்துக் காட்டுகின்றன. நாமும் சமாதானத்தையே விரும்புகிறோம். ஒரு நிரந்தரமான சமாதானம் ஏற்பட்டு, மக்கள் அனைவரும் நிம்மதியாக வாழவேண்டும் என்பதையே விரும்புகிறோம். இன்று சமாதானத்துக்கு முட்டுக்கட்டையாக இருப்பது போர். எனவே போர் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். யார் இந்தப் போரைத் தமிழ் மக்கள் மீது திணித்தார்களோ, அவர்களே இந்தப் போருக்கு, முடிவுகட்ட முன்வர வேண்டும். போர் மூலம், அடக்கு முறையின் மூலம், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது என்பதை, சிங்கள தேசம் உணர்ந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளை, நிறைவு செய்வதன் மூலமே, இன்றைய இன நெருக்கடிக்குத் தீர்வு காணலாம். சமாதான வழி மூலமே இதனைச் சாதிக்கலாம். இதனைச் சிங்கள இனவாத அரசியல்வாதிகளுக்கும், இராணுவவாதிகளுக்கும், சிங்கள மக்களே உணர்த்தவேண்டும். நாம் சிங்கள மக்களை நேசிக்கிறோம். நாம் சிங்கள மக்களுக்கு விரோதமானவர்கள் அல்ல. சிங்கள தமிழ் மக்களுக்கு மத்தியில் எழுந்த, முரண்பாடுகளுக்கும் பகைமைக்கும், இனவாத சக்திகளே காரணம். இந்த இனவாத சக்திகளைச் சிங்கள மக்கள் இனம் கண்டு ஒதுக்கிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் இலங்கைத்தீவில் நிரந்தரமான சமாதானம் ஏற்படும் என்று கூறியிருக்கிறார்.

தொடரும்...

-இரணியன்-

# ஈழத்தமிழரின் அரசியல் இருப்பை முன்னகர்த்தும் காரணிகள்

தமிழ்மக்களின் அரசியல் விடுதலைக்கான ஒரே வழி எனக் கருதிய ஆயுதப்போராட்டம், நவீன சர்வதேச அரசியல் சித்தாந்தத்திற்குள் மிதிபட்டு, முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்டு, கிட்டதட்ட மூன்று வருடங்களையும் தாண்டியுள்ளது. இந்தப் பின்னடைவைத் தொடர்ந்து, ஏற்பட்டுள்ள தொய்வு நிலையிலிருந்து மீண்டெழுந்து, தமது சமூக அரசியல் விடுதலைக்கான இருப்பை, உலக வெளியில் நிலைநிறுத்தவும், தமிழீழத் தனியரசு என்னும் இலட்சியத்தை அடையவும், பிராந்திய மற்றும் சர்வதேச சக்திகளின் நலன்கள் சார்ந்து பயணிப்பது, என்ற பரிமானத்தில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சர்வதேச அரசியல் சூழலைக கையாளுவதன் மூலம், ஈழத்தமிழர்களுக்கான சர்வதேச



அங்கீகாரத்தைப் பெறலாம், என்ற இந்த முயற்சி வரவேற்றக்கப்பட வேண்டியதொன்றே, அங்கிகாரத்தைப் பெறுவதற்கான, சர்வதேசப் போக்கைப் புரிந்து கொள்ளாமைதான், ஆயுதப் போராட்டத்தின் பின் அடைவிற்கான காரணங்களில் ஒன்று, என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுவதால், தற்போதைய சூழலில் அதற்கான முயற்சிகளைச் செய்வது காலத்தின் கட்டாயமாகும்.

மறுபுறம், தமது நலன்களுக்காக, உள்நாட்டுப்பிரச்சினை என்ற எல்லையைக்கடந்து, சர்வதேசப் பிரச்சினை என்ற வரையறைக்குள், ஈழத்தமிழர்களின் இனப்பிரச்சினையை, மேற்குலகம் பார்ப்பதனால், இதில் கிடைக்கும் அரசியற் செயற்பாட்டு வெளியில், ஈழத்தமிழர்கள் தமது சமூக அரசியல் இருப்பிற்கான, கருத்தியல்த் தளத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பு ஏற்படும். அத்துடன் இதற்கு நீண்ட காலம் எடுப்பினும், மேற்குலக சக்திகளின் அங்கீகாரத்தைப் பெறுவதன் ஊடாக, ஈழத்தமிழினம் தனித்துவமான பண்புகளைக் கொண்ட தேசிய இனம், அதனால் தம்மைத் தாமே ஆளும் உரிமையைக் கொண்டுள்ளது என்பதை, ஜனநாயக ரீதியில், மேற்குலகத்தின் கதவுகளைத்தட்டி, எமக்கான நியாயத்தைப் பெறுவதற்கான ஒரு வழி என்பது புரிதலுக்குரியது.

ஸ்ரீலங்காவை மையப்படுத்திய வல்லரசுகளின் முரண்பாடு, ஸ்ரீலங்கா அரசின் பேரினவாத அரசியல், போர்க்குற்றம், இனப்படுகொலை போன்ற விடயங்களைச் சாதகமாக நகர்த்தி, சர்வதேச நலன்களுடன் சமப்படுவதன் மூலம், ஈழத்தமிழர்களிற்கான தீர்வுத்திட்டம் சாத்தியமானது என்பதுதான், இக் கோட்பாட்டில் முன்வைக்கப்படுகின்ற எடுகோள். நியாயமான எதிர்பார்ப்புக்களுடன் முன்வைக்கப்பட்டாலும், உள்ளார்ந்த அனுமானங்களின் அடிப்படையில் பார்க்கும் போது, அது ஒரு மயக்கக் கோட்பாடாகவே கருதவேண்டியுள்ளது.

ஒரு மயக்கக் கோட்பாடு என்ற சொல்லுக்குள் வைத்து, வியாக்கியானப் படுத்துவதை, தற்போது மிகவும் நம்பிக்கையுடன் முன்னெடுக்கப்படும் அந்த முயற்சியை, பலவீனப்படுத்துவதாகக் கருதக் கூடாது. மாறாக, கோட்பாட்டின் அடிப்படைக்காரணிகளின் சந்தர்ப்பவாதத் தன்மையைத் தெளிவுப்படுத்துவதற்கான முயற்சியாகவே, இதைப் பார்க்க வேண்டும். புவிசார் அரசியற் போட்டிகளை மையப்படுத்தி, சர்வதேச நலன்களுடனும், நிலைப்பாடுகளுடனும், ஈழத்தமிழ் மக்களின் நலன்களையும், நிலைப்பாடுகளையும் பொருந்தச் செய்யும் போது, அது தமிழ் மக்களின் அரசியல் விடுதலையைப் பெறுவதற்கான வாசலை, திறந்துவிடும் அல்லது வழிசமைக்கும் என்ற கோட்பாட்டின் மீதான, மயக்கத்தைப்பற்றிய கருத்துப் பகிர்வைச் செய்வதே கட்டுரையின் பிரதான நோக்கம்.

ஒரு நாட்டின் நலன் என்பது, எப்போதும் நீதிக்கும் தர்மத்திற்கும் கட்டுப்பட்டது அல்ல. சுய நலம், சுயலாபத்தின் அடித்தளத்தில் உருவாகும், நாட்டின் நலனானது அதிகாரப்பலம், பொருளாதாரப்பலம் என்பவற்றை வலுப்படுத்துவதற்காகவே பயன்படுத்தப்படுகின்றது. இது காலத்திற்கு ஏற்ப மாற்றமடையும், தேவைக்கு ஏற்ப கொள்கைகளை உருவாக்கும். இங்கு மனிதாபிமானம், மனிதநேயம் என்ற எந்த அடிப்படைக் கோட்பாடுகளுக்கும் இடமில்லை. எனவே மேற்குலக நலனுடன், தமிழர் நலன்களைப் பொருத்துதல் என்பதன் உள்ளார்த்தமான அர்த்தம், பொருந்தச் செய்தல் என்பதல்ல, மாறாக மேற்குலகம் தனது தேவைகளிற்கேற்ப, தமிழர் நலன்களைப் பயன்படுத்துதல் என்பதே வெளிப்படையுண்மை.

இலங்கைத்தீவில் மேற்குலக நலன்களுக்கப்பால், பிராந்திய வல்லரசுகளின் நலன்களும், அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. பிராந்திய வல்லாதிக்க சக்தியான இந்தியா, இந்துசமுத்திரப் பிராந்தியத்தில், ஆசிய வல்லாதிக்க சக்தியான, சீனாவின் மேலாதிக்கத்ததைத் தடுப்பதில், அதிக அக்கறையுடன் செயற்படுகின்றது. சீனாவின் அதிவிரைவான இந்த இராணுவப் பொருளாதார வளர்ச்சி, இந்தியாவை அச்சம் கொள்ளச் செய்கின்றது. அதே வேளை இலங்கைத்தீவும் சீனாவின்





ஆளுகைக்குள் கொண்டுவரப்பட்டால், சீனாவின் முற்றுகைக்குள் இந்தியா அகப்பட்டுவிடும் அபாயம் உள்ளது என்ற காரணத்திற்காக, இலங்கைத்தீவில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட முனைகின்றது. மறுபுறம் ஆர்ப்பாட்டமில்லாமல் அமைதியாக, தனது சர்வதேச செயற்பாடுகளை மேற்கொள்ளும் சீனாவை, கையாளவேண்டிய தேவை மேற்குலகத்திற்கு இருக்கின்றது. இவற்றின் வெளிப்பாடே, இந்திய அமெரிக்கா அரசுகளின் நெருக்கமாகும்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் நீண்டகாலமாக, மிகத் தெளிவாகவே சர்வதேச நலன்களைக் கையாண்டு வருகின்றது. இலங்கைத்தீவு சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே, அரசியல் ராஜதந்திரத்தில் பல இடங்களில், நாம் தோற்றுள்ளோம் என்பது வெளிப்படையானது. எமது கைகளை வைத்தே, எம்மைக் குத்தும் செயற்பாடுகளை, வரலாற்று ரீதியாக சிங்களம் செய்துவந்துள்ளது. இத்தகைய அரசின் பேரினவாத அரசியல் தலைமைகள், சிறிலங்காவின் கேந்திர முக்கியத்துவத்தைக் கருவியாக்கி, புவிசார் போட்டி அரசியலை உருவாக்கி, அதனூடாகத் தமது அரசியல் அடைவுகளைப் பெற்றுள்ளன, பெற்று வருகின்றன என்பதுதான் யதார்த்தம். இறுதிப்போரின் போது, உலக ஆதிக்கப் போட்டியாளர்களையும், மற்றும் பிராந்திய ஆதிக்கப் போட்டியாளர்களையும் தளத்திற்கு எடுத்து. அவர்களைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகளை பின்னடைவிற்குள்ளாக்கியது வரை, சிங்களத்தின் அரசியல் சாணக்கியம் வலுவானது என்றே கூற வேண்டும்.

விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்காக, இந்திய அரசுடன் கைகோர்த்த மஹிந்த அரசு, தற்போது இந்தியாவின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் முயற்சியை, நாசூக்காகச் செய்து கொண்டு வருகின்றது. எண்பதுகளில், சிறிலங்காவைத் தனது பிடிக்குள் வைத்திருக்கும் நோக்கத்துடன், ஈழத்தமிழர் விடுதலை இயக்கங்களை வளர்த்த இந்தியா, மீண்டும் இத்தகைய செயற்பாடுகளை முன்னெடுக்கலாம், என்ற அனுமானம் காரணமாகவே, தனது பாதுகாப்புச் செலவீனத்தைப் பலமடங்கு அதிகரித்துள்ளது. அண்மையில் வரவுசெலவுத்திட்ட விவாதத்தின் போது, சிறிலங்கா ஜனாதிபதி அவர்கள், வெளிநாட்டு சக்திகளின் தலையீடுகளை முறியடிக்கவே, பாதுகாப்புச் செலவீனம் அதிகரிக்கப்பட்டுள்ளது. என்ற கூற்றின் மூலம், இதனை நிரூபித்துள்ளார். இங்கேதான் முக்கியமான கேள்விக்கு விடை காண வேண்டியுள்ளது. பிற நாடுகளின் நலன்களுடனான அங்கீகாரம், அல்லது இருப்பு இருக்குமாயின், மேற்குலகின் நலன்களுடன், சிங்களத்தின் நலன் ஒத்துப்போனால், ஈழத்தமிழர்களின் நலன்கள் தொடர்பாக, மேற்குலகம் என்ன நிலைப்பாடு எடுக்கும்? மேற்குலகம் தமிழர்களின் நலன்களுடன் மட்டும்தான், ஒத்திசைந்து போகும் என்பதற்கு என்ன உத்தரவாதம்? ஒருவேளை மேற்குலக நலன்களுடன், தமிழர் நலன்களை ஒத்துப்போக வைக்க முடியாமல் போனால், தமிழர் விடுதலைக்கான எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்.

இத்தகைய ஒரு நிலையில், இலங்கைத்தீவு தொடர்பில் ஏற்பட்டிருக்கும் வல்லரசுகளின் ஆதிக்கப்போட்டி, ஈழத்தமிழர்களுக்கு சாதகமாக அமையும். அதன் மூலம் தீர்வை எட்டமுடியும். அதுவரை எமது கொள்கை உறுதிப்பாட்டைத் தக்கவைத்திருந்தால் போதும், என்னும் அனுமானங்களின் அடிப்படையில் நிறுவப்பட்டவை, நிச்சயமாக நடைபெறும் என்பதற்கான உத்தரவாதங்கள் எதுவும் இல்லை.

ஈழத்தமிழர் அரசியல் இருப்பை நிலைநிறுத்தும் ஒரே கோட்பாடாக, இதை முன்வைப்பது ஆபத்தானது. இந்தக் கோட்பாட்டைப் பலவீனப்படுத்தும் பல புறக்காரணிகள் இருக்கின்றன. எனவே இது இப்படித்தான் நடைபெறும் என முடிவாக்கி விடவும் முடியாது. அனுமானங்களில் ஏற்படும் மாற்றங்கள், முடிவிலும் தாக்கத்தைப் பிரதிபலிக்கும். ரைம் சஞ்சிகையின் இணையத்தில் Jyoti Thottam எழுதியுள்ள கட்டுரையில்,



ஆசியாவின் மிகப்பெரிய நாடுகளான, சீனா மற்றும் இந்தியாவுடன் நெருக்கத்தைக் கொண்டுள்ள சிறிலங்காவுடன், இராஜதந்திர ரீதியான அணுகுமுறைகளைப் பயன்படுத்துவது, பெறுமதியாக இருக்குமா? என்பதைத் தீர்மானிக்க வேண்டிய நிலையில் அமெரிக்கா உள்ளது. அதாவது மேற்குலக கோட்பாட்டை முற்றுமுழுதாகப் பிரயோகிக்கும் போது, மனித உரிமைகள் என்ற பதம், அதன் தார்மீகச் சக்தியை இழந்து விடுகின்றது என்பதைத் தற்போது, சிறிலங்காவில் இடம்பெற்ற சம்பவங்களிலிரந்து கற்றுக்கொள்ள முடிகின்றது. மேலும் மேற்குலகத்தால் தலைமை தாங்கப்படும், இராஜதந்திர அழுத்தங்கள், மற்றும் பொருளாதாரத் தடைகள் என்பன, பர்மா போன்ற நாடுகளில் மட்டுமே வெற்றியளிக்க முடியும், ஆனால் இவ்வாறான உத்திகள், புதிய ஆசிய நூற்றாண்டில் நீண்ட கால வெற்றியைத்தராது. என குறிப்பிட்டுள்ளார்.

உலக வெளியில் தமிழர்களின் இருப்பை




நிலைநிறுத்தவும், தமிழீழ தனியரசின் அங்கீகார இலக்கை அடைவதற்கும், சர்வதேச நலன்களுடன் தமிழர் நலன்களைச் சமப்படுத்துவதற்கான, வாசலைத்திறக்கும் செயற்பாடுகள், மிக அவசியமானவை. சர்வதேசத்தில் கிடைக்கின்ற அரசியல் வெளியை வைத்து, அதற்கான செயற்பாடுகள், ஜனநாயக ரீதியாக முன்னெடுக்கப்படுகின்றன. அவர்களுக்கான முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்க வேண்டியது எமது கடமை, என்பதை மீண்டும் ஒரு முறை கட்டுரை வலியுறுத்துகின்றது.

அதேவேளை இது ஈழத்தமிழர்களின், இலக்கு நோக்கிய செயற்பாடுகளில் ஒன்றேதவிர, தனியரசை அடைவதற்கான ஒற்றைக் கோட்பாடு அல்ல. சர்வதேச நலன்களின் சமப்படுத்தலிலோ, கொள்கையை மட்டும் தக்கவைத்துக் கொண்டிருப்பதிலோ, எமது இருப்பு தங்கிவிட்டது. அவை மட்டுந்தான் தமிழ்மக்களிற்கான ஒரே அரசியல் பாதை என வரைவிலக்கணப்படுத்தி, அதற்காக எமது விடுதலையை, மேற்குலகத்திடம் கையாள விட்டு விட்டு, தீர்வு கிடைக்கும் என்ற ஒரே நம்பிக்கையில் பயணிப்பதோ, அல்லது நம்பிக்கையுடனிருப்பதோ பொருத்தமானதா? இதற்கு அப்பால், பேரம்பேசும் ஆற்றலை வளர்ப்பதற்கான எமக்கான கூட்டிணைவுச் செயற்பாடுகளை பல்வேறு பாதைகளில் முன்னெடுக்க வேண்டும். அரசியல் இருப்பை தனித்துவமாக நிலைநிறுத்த, புலம்பெயர்தேசம் ஒன்றிணைய வேண்டும். குறிப்பாக பல்துறை ஆற்றலுள்ள எமது இளைஞர் சமூகத்தின் தேசப்பற்று மிக்க, தியாக உணர்வுள்ள, செயற்றாட்டுத் தன்மையுள்ள, புலமைசார் கூட்டிணைவு கொண்ட, பலமான 'புலம்பெயர் தமிழ்ச் சமூகம்' உருவாக்கப்பட வேண்டும். புலம்பெயர்தேசம் ஒன்றிணைய வேண்டும். குறிப்பாக பல்துறை ஆற்றலுள்ள எமது இளைஞர் சமூகத்தின், தேசப்பற்று மிக்க, தியாக உணர்வுள்ள, செயற்பாட்டுத் தன்மையுள்ள, புலமைசார் கூட்டிணைவு கொண்ட, பலமான 'புலம்பெயர் தமிழ்ச் சமூகம் ' உருவாக்கப்பட வேண்டும்.

அவ்வாறு உருவாகும் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தை அரசியல்,பொருளாதார, புலமைச்சார், கருத்தாழுகை உள்ள பல பரிணாமங்களைக் கொண்டமைந்த இனமாக, கட்டியெழுப்பும் போது, உருவாகும் பலம் எதிர்காலத்தில் மேற்குலகங்களின் நலத்தைத்தன்னுடன் சமப்படுத்தும் வாய்ப்புள்ளது. ஏனெனில் இது தலைமுறைக்கான போராட்டம், ஈழத்தமிழ் மக்களின் இருப்பு தொடர்பான போராட்டம். நாம் தோல்வி மனப்பான்மையில், துவண்டுவிடப்போகின்றோமோ? அல்லது எமது வேதனைகளையும், போராட்டத்தையும், தியாகங்களையும், இனத்தின் கௌரவத்தையும் மனதில் நிறுத்தி, அந்த உயர்ந்த இலட்சியத்தை நோக்கிச் செயற்படபோகின்றோமோ? என்ற கேள்விகளிலிருந்துதான் விடுதலைக்கான அடுத்த கட்ட நகர்வு

05 ஆம் பக்கம் பார்க்க

# பி ரா ந் தி ய ச் செ ய் தி க ள்



## இலங்கையின் வடக்கே மேலும் கைதுகள் தொடரும்

இலங்கையின் வடக்கே, கைதுசெய்யப்பட வேண்டிய நபர்கள் இன்னும் இருப்பதாக இலங்கை காவல்துறைப் பேச்சாளர் பிரிஷாந்த் ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த சில வாரங்களில், 45 பேர் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவி-னரால கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்கள் பூசா முகா-மில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் என்றும், நீண்டகாலமாக சேகரித்துவந்த புலனாய்வுத் தகவல்களின்படியே, இவர்கள் அனை-வரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், இலங்கை காவல்துறைப் பேச்சாளர் பிரிஷாந்த் ஜயக்கொடி தெரிவித்தார்.

இவர்கள் அனைவரும் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள் என்பதை, நிச்சயமாக உறுதிசெய்தன் பின்னரே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், அவர் கூறினார். இலங்கை இராணுவத்திடம் சரணடையாமல் மறைந்து வாழ்ந்த இவர்கள், தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் நடத்தப்படும் என்றும், அதன்பின்னர் உரிய சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் காவல்துறைப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

ஊேவிகளுக்கு பதிலளித் பிரிஷ ாந்த் ஜயக்கொடி, புலனாய்வுப் பிரி வினரின் தகவல்களின் படி, இன்னும் கைதுசெய்யப்பட வேண்டியவர்கள் வட-பகுதியில் இருப்பதாகவும் கூறினார். ஒருவர் மாணவர், மூவர் பெண்கள், இவர்கள் அனைவரும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருப்பதாக காவல்த் துறையினர் தமது ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளதாக, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட இணைப்பதிகாரி டி.கனகராஜா கூறினார்.

## மீண்டும் ஒரு சர்வதேச நெருக்கடிக்குள் சிறிலங்கா அரசு.



சிறிலங்காவில், பிரதம நீதி யரசரைப் பதவி நீக்க மேற்கொண்டு வரும் நடவடிக்கை தொடர்பில், அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென, ஐ.நாவின் சிறப்பு பிரதிநிதி கேப்ரியேலா கனூல் தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசர், ஷிராணி பண்டாரநாயக்க மீதான விசாரணைக-ளில், நியாயமான ஒரு விசாரணைக்கான அடிப்படைத் தன்மைகள், எவை யும் காணப்படவில்லை எனவும், நீதிபதிகளும், நீதித்துறை அதிகா-ரிகளும் கூடுதலான அச்சுறுத்தல், மற்றும் தாக்குதலுக்கு ஆளாகின்ற சம்பவங்கள், நீதித்துறையின் சுயாதீனத் தன்மைக்கு ஊறு ஏற்படுத்தும் வகை யில், அமைந்துவிடக் கூடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மையில் சிறிலங்காவில் நிர்வாகத்துறையும், நாடாளுமன்றமும், பிரதம நீதியரசரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு, முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. ஆனால் அத்தகைய நடவடிக்கை குறித்து, சிறிலங்கா அரசு மீள்பரிசீலனை செய்ய வேண்டும்.

பிரதம நீதியரசர் மீதான இத்தகைய நடவடிக்கை, சிறிலங்காவில் நீதித்துறை மீது தொடர்ச்சியாக நடைபெற்று வரும், தாக்குதலின் உச்சக்கட்டம் என்றே எண்ணுகிறேன். கடந்த சில மாதங்களில், சட்டத்தரணிகள் மீது தாக்குதல்களும், அச்சுறுத்தல்களும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றின் அதிகரிப்பு ,நாளுக்கு நான் எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்கு உயர்ந்துகொண்டே செல்கின்றன.

சிறிலங்கா அரசியல் யாப்பின் , 107 ஆவது சட்டப்பிரிவு மற்றும் நாடாளுமன்ற நிலைக்குழுவின் உத்தரவு ஆகிய இரண்டையும், இணைத்துப் பார்க்கும் போது, அவை சர்வதேச மனித உரிமைகள் சட்டத்துக்கு புறம்பானவையாகவே காணப்படுகின்றன. இந்த விடயம் 2003 ஆம் ஆண்டே மனித உரிமைகள் குழு-வால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. எனி-னும் அவற்றை நிவர்த்திக்க, சிறிலங்கா அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும் சுட்டிக்காட்ட வேண்டிய விடயம்.

நாட்டில் ஒவ்வொரு துறையும், தனி அதிகாரத்துடன் செயற்படும் வகை யிலும், சர்வதேச மனித உரி மைகளை பாதுகாக்கும் நோக்கிலும், நீதிபதிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்படும் போது, சுயாதீனமான ஒரு ஆணையத்தால், நேர்மையாக நடத்தப்பட்டு அது மதிக்கப்பட வேண்டும்.

இதே வேளை, பிரதம நீதிய ரசர் தொடர்பில், ஐக்கிய நாடுகள் வெளியிட்டுள்ள கருத்துக்கு, தமது பதிலை அனுப்புவதற்கு சிறிலங்கா அரசு தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. வெளியுறவுத்துறை அமைச்சின் சார்பாக பேசவல்ல, சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர், இது குறித்து ஊடகங்களுக்கு விபரிக்கையில், எதிர்வரும் சில தினங்களில், தமது விளக்கத்தை ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பவுள்ளதாகவும் கூறினார்.

## நீதிமன்ற உத்தரவினை ஏற்றுக்கொள்ள வேண்டும் - லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி



பிரதம நீதி யரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான, குற்றவியல் பிரேரனை தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு, விசா ரணை நடத்த முடியாது என்ற மேன்முறையீட்டு நீதிமன்றின் தீர்ப்பினை, பாராளுமன்றம் உட்பட அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென, அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்,லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

குற்றவியல் பிரேரனை, அர சியல் அமைப்பிற்கு முரணானது என, மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது நாட்டின் அர சியல் சாசனம் தொடர்பில், சட்ட வரைவிலக்கணத்தை வழங்கும் அதி-காரம், மேன்முறையீட்டு நீதிமன்றிற்கு மட்டுமே காணப்படுகின்றது. எனவே நாடாளுமன்றம் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும், இந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அரசியல் அமைப்பிற்கு முர-ணாக, செயற்பட்ட காரணத்தினால் ,எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிலிருந்து விலகிக் கொண்டனர்.

திவிநெகும சட்டம் தொடர்பில், நாடாளுமன்றில் விசேட உரையாற்றிய சபாநாயகர், நாட்டின் அரசியல் சாசனம் தொடரியல், சட்ட வரைவிலக்கணம் வழங்கக் கூடிய அதிகாரம், மேன்முறையீட்டு நீதிமன்றிற்கு காணப்படுவதாகத் தெரிவித்திருந்தார் என்பது இங்கு சுட்டிக் காட்டப்படவேண்டிய விடயம்.

எனவே நீதிமன்றின் தீர்ப்பை, சபாநாயகர் ஏற்றுக்கொண்டு செயற்பட வேண்டுமென, லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்திருந்தார். பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா, தாக்கல் செய்த மனுவை, பரிசீலனை செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம், நேற்று அளித்த தீர்ப்பு தொடர்பில், வெளியிட்ட விசேட ஊடக அறிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழர் பிரதேசங்களில் இனவாதிகளின் அதிரடி நடவடிக்கைகள்.

தமிழர் பிரதேசங்களில் கையப்படுத்தும் நோக்கில் இனவாதிகளின் முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் சிறிலங்கா அர சின் தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களத்தினால், புராதன இடங்கள் என அடையாளம் காட்டப்பட்டுள்ளன.

இவை தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படவுள்ளதாகவும் அறிய முடி-கிறது. இதன் முதல் கட்டமாக அம்பாறை மாவட்டத்தில் இனம் காணப்பட்டுள்ள இடங்கள் புராதன இடங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டு அவை மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படவுள்ளன.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கிழக்கு மாகாணத்திற்கு சென்றிருந்த ஹெல உறுமயவின் முக்கியஸ்தர்களும் சிங்கள அரசு சார்பான கடும் போக்காளர்களும் அதன் பெரும்பாலான பகுதி-களை புராதன இடங்கள் எனக் அடையாளப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புலிகளின் பிரிவினை வாதம் தொடரும் வரையில் ஜெனீவா செல்ல நேரிடும்: டலஸ் அழகப்பெரும



தமிழீழ விடுத லைப் புலிகளின் பிரிவினை வாதம், தொடரும் வரையில் ,ஜெனிவா மனித உரிமைப் பேரவை அமர்வுகளில், கலந்து கொள்ள நே-ரிடும் என, அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரீதியில் தமிழீழ விடுதலைப்புலிகள், தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றனர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, அரசியலிலிருந்து ஓய்வு பெற்றாலும், சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுக வேண்டும் என சிலர் கருதுகின்றனர்.

பௌதிக ரீதியாக, தமிழீழ விடுதலைப்புலிப் பயங்கரவாதம், கடந்த 2009 ஆம் ஆண்டு முடிவுறுத்தப்பட்டது. எனினும், தமிழீழ விடுதலைப் புலிகளின், சர்வதேச வலையமைப்பின் நடவடிக்கைகள், இன்னமும் முடிவுறுத்தப்படவில்லை. 2010 ஆம் ஆண்டின், முன்னாள் இராணுவத் தளபதி ,சரத் பொன்சேகாவின் பின்னணியிலும் ,இந்தச் சர்வதேச சக்திகள் செயற்பட்டன. மஹிந்த ராஜபக்சவைத் தேர்தலில் தோற்கடிக்க முடியாது என, நன்கு அறிந்து கொண்ட எதிர்க்கட்சிகள், இந்த சூழ்ச்சித் திட்டங்களுக்கு உடந்தையாக செயற்படுகின்றனர்.

இதற்கு முன்னரும், பிரதம நீதியரசருக்கு எதிராக, குற்றப் பிரேரனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனினும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, நீதிமன்றக் கட்டமைப்பின் சுயாதீனத் தன்மைக்கு, களங்கம் ஏற்படுத்த முயற்சிப்பதாக, பிரசாரம் செய்யப்படுகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, ஓர் சட்டத்தரணி. 30 ஆண்டுகால அனுபவம் கொண்டவர். எந்தவொரு சந்தர்ப்பத்திலும், நீதிமன்றத்தைப் பலவீனப்படுத்த முயற்சிக்க மாட்டார் என, அவர் குறிப்பிட்டுள்ளார். அக்குரஸ்ஸ பகுதியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## புதிய ஆண்டில் பட்டதாரிகள் மனிதவள அமைப்பு


மலரப் போகும் புதிய ஆண்டில், புதிய பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி, புதிய உத்வேகத்துடன், அமைப்பை முன்னோக்கி வழிநடத்திச் செல்லவுள்ள தாக , முல்லைப் பட்டதாரிகள் மனித வள அமைப்பின் தலைவர் பார்த்தீபன், தினப்புயலுக்கு அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில், க.பொ.த. சாதாரணதர மற்றும் உயர்தர மாணவர்களுக்கான, பயிற்சிக் கருத்தரங்குகளைத் தற்போது நடாத்திக் கொண்டிருப்பதாகவும், புது வருடத்தில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்குகளை நடாத்த உத்தேசித்துள்ளதாகவும் அவர் இச்செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

களத்தில் தற்போது செயலாற்றி வருகின்ற எமது உறுப்பினர்களை, ஸ்திரப்படுத்தி மேலும் புலம் பெயர்ந்து, வெளிநாடுக-ளில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற எமது உறுப்பினர்களையும் இணைத்து, வருங்காலத் தூண்களான எமது மாணவ சமுதாயத்தை, ஒரு முன்னேற்றகர பாதையில் இட்டுச்செல்வதன் ஊடாக, எமது சமுதாயத்தை அரசியல், கல்வி, பொருளாதாரம், மற்றும் அறிவியல் ரீதியாக வளர்த்தெடுத்து, மேலும் முன்னோக்கிப் பயணிப்போம் என முன்னேறுவதற்கு எமது உறுப்பினர்களும் உறுதி பூண்டுள்ளனர் என அவர் மேலும் தெரி வித்துள்ளார்.




# சினிமா உலகம்

## விரைவில் இம்சை அரசன் 23ம் புலிகேசி –2



சிம்புதேவன் இயக்கத்தில் ''இம்சை அரசன் 23-ம் புலிகேசி-2 க்கான, கதை விவாதம் தொடங்கி உள்ளது. கடந்த வாரம் சாலிகிராமத்தில், வடிவேலுவின் அலுவலகத்தில், முதற்கட்டப் பணிகள் தொடங்கி நடந்த வண்ணம் உள்ளன. முதல் பாகத்தை விட, 2 ஆம் பாகத்தில், கொமெடி சற்று தூக்கலாக இருக்கணும் எனச் சொல்லி, அதன்படி கதையை எழுத வைத்திருக்கிறாராம் வடிவேலு. தொடக்க காலத்திலிருந்து, தனக்கு கொமெடி டிராக் எழுதிய சிலரை அழைத்து வாய்ப்பு கொடுத்திருக்கிறாராம் வடிவேலு. சில அரசியல் மாற்றங்கள் காரணமாக, கடந்த 2012ஆம் ஆண்டு, வாய்ப்புகள் இல்லாமல் இருந்து வந்த வடிவேலுக்கு, இது மறுபிரவேசமாகும். இதுதவிர ஒரு பெரிய இயக்குனரின் இயக்கத்தில் ''ஆப்ரிக்காவில் வடிவேலு" என்ற புதிய படத்திலும் நடிக்க, உள்ளதாகவும் கூறப்படுகிறது.

## நம்பிக்கையில் இருக்கிறார் நயன்தாரா.



சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட சில சர்ச்சைகளுக்குப் பின், வெற்றிகரமாக தன் இரண்டாவது இன்னிங்சை தொடங்கியுள்ளார் நயன்தாரா.

இவர் சமீபத்தில் தெலுங்கில் வெளியான "கிருஷ்ணம் வந்தே ஜகத்தரும்" என்ற படத்தைப் பெரிதும் நம்பியிருந்தார். இந்தப் படத்தின் மூலம், தெலுங்கில் உச்சத்துக்கு போய் விடலாம், என நினைத்திருந்தார்.

ஆனால் படம் சுமார்தான், அது மட்டுமல்லாமல் இதில் நயன்தாராவின் நடிப்பும், அவ்வளவாக ரசிகர்களை ஈர்க்கவில்லை. விமர்சனங்களும். நயனுக்கு எதிராகவே வந்ததனால், நயன் கவலையடைந்துள்ளார். என்னுடைய திரையுலக வாழ்க்கையை, ஏதாவது ஒரு படத்தை வைத்து, முடிவு செய்வது சரியல்ல என கவலை தெரிவித்துள்ளார்.

பல படங்கள் கைவசம் உள்ளன. அவை அனைத்துமே, நல்ல கதையம்சம் உடைய படங்கள். அந்தப் படங்கள் வெளியான பின் பாருங்கள். தெலுங்கிலும், தமிழிலும் மீண்டும் பிர-பலமாகி விடுவேன், என நம்பிக்கையுடன் கூறுகிறார் நயன்தாரா.

## நடிகை தேவயானி நடிக்கும் "திருமதி தமிழ்"




கொலிவூட்டில் இராஜகுமாரன் - தேவயானியின் "இராதே பிலிம்ஸ்" சார்பில் உரவாகும் படம் "திருமதி தமிழ்". இயக்குனர் இராஜகுமாரன், இதற்கு முன்பு இயக்கிய எல்லா படங்களிலும், அவரது மனைவி தேவயாணி மட்டுமே கதாநாயகியாக நடித்திருக்கிறார். இந்தப் படத்திலும் தே-வயானி, தான் கதாநாயகி. நாயகனாக நடிக்கும் இராஜகுமாரனுடன், 25நட்சத்திரங்களுக்கு மேற்பட்டோர் நடித்துள்ளனர். தற்போதைய கால கட்டத்தில், ஒரு கதாநாயகி 4,5படம் நடிப்பதே தடுமாற்றமாய் உள்ள நிலை-லயில், தேவயாணிக்கு இது 75வது படம் ஆகும். தேவயாணி இத்தனை படம் முடித்திருப்பதும், அதுவும் 75வது படத்திலும், கதாநாயகி யாக நடித்திருக்கிறார் என்பது, பெருமைக்குரிய விடயம். இதனால் தேவயானியைப் பாராட்டும் விதமாக, ''எவர்க்ரீன் ஸ்டார்'' என்று டைட்டிலில் போட்டிருக்கிறார் இராஜகுமாரன். படங்கள் டிஜிட்டல் கமெராவில் எடுக்கப்படும், இந்த காலகட்டத்தில் "திருமதி தமிழ்", 1,45,000அடிவரை பிலிமில் அதுவும் ஈஸ்ட்மென் கலரில் 4.5கோடி செலவில் தயாரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## கமல், ஸ்ருதியும் புதுப்படமொன்றில் இணைகின்றனர்




ஏற்கனவே ஸ்ருதி, 7ஆம் அறிவு படத்தில் நடித்தார். தற்போது 'பலுடி',ஏவடு' என்ற தெலுங்கு படங்களிலும் நடித்து வருகிறார். அடுத்து தந்தை கமல்ஹாசன் படத்தில் நடிக்க உள்ளார். இந்த தகவலை, கமல் ஜதராபாத்தில் ஊடகத்தினரிடம் தெரிவித்தார். இது குறித்து அவர் கூறுகையில்,எனது மகள் ஸ்ருதியும் நானும், புதுப் பட மொன்றில் இணைந்து நடிக்கப் போகிறோம். அதற்கான கதை தயாராக உள்ளது. தமிழ்,தெலுங்கு, இந்தி ஆகிய மூன்று மொழிகளிலும் இப்படம் உருவாகும். ஸ்ருதி தமிழ், தெலுங்கு பட உலகில் பிரபலமாகிவிட்டார். ஆனால் இந்தியில் பெயர் வாங்கவில்லை என்றும், அங்கு முன்னணி நடிகையாக உயர்ந்ததும் இந்த படத்தை எடுப்போம் எனவும் கூறியுள்ளார்.

## ஆஸ்கர் விருது பெற்ற ஹாலிவுட் எடிட்டர் மைக் மரணம்



ஹாலிவுட் படைப்பான "லார்ட் ஆப் த ரிங்ஸ்" படத்தில் சவுண்ட் எடிட்டர் ஆக பணிபுரிந்த, மைக் ஹாப்கின்ஸ் (வயது 53) விபத்தில் மரணமடைந்தார். நியூசிலாந்து நாட்டின் வடக்கு தீவுப் பகுதியில், சிறிய வகை படகில், ஆற்றில் பயணம் செய்து கொண்டிருந்த போது, திடீரென மூழ்கியதில் படகில் பயணித்த மைக் பலியானார். இவர் கடந்த 2003ஆம் ஆண்டு வெளியான "கிங் காங்" மற்றும் 2006ஆம் ஆண்டு வெளியான "பெல்லோசிப் ஆப் ரிங்க்" ஆகிய படங்களில் பணிபுரிந்ததற்காக, ஆஸ்கர் விருது வென்றார். இந்த விருதினை, தன்னுடன் பணியாற்றிய, ஈத்தன் வேன்டர் ரைன் என்பவருடன் பகிர்ந்து கொண்டார். இது குறித்து நியூசிலாந்து ஹெரால்டு செய்தித்தாளில் வெளியான தகவலில், பல நடிகர்கள், இயக்குனர்கள் மற்றும் சினிமா துறை பிரபலங்கள் ஆகியோர் ஹாப்கின்ஸ் உடன் பணியாற்றியுள்ளனர். அவர்கள் மைக்கை இழந்து வாடுவார்கள் என்று, இயக்குநர் பீட்டர் ஜாக்சன் கூறியுள்ளதாக செய்தி ெளியாகியுள்ளது. மேலும், மைக் மற்றும் ஈத்தன் ஆகி-யோர் "டிரான்ஸ்பார்மர்ஸ்" படத்திற்காக ஆஸ்கர் விருது பெறுவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது.

## திரைப்படமாகும் டெல்லி மாணவியின் "பரிதாபம்"



"நிஷா" என்ற தெலுங்குப் படத்தை, பிரபல தெலுங்கு இயக்குனர், ரமணா கட்டம் இயக்கி வருகின்றார். இப்படத்தில் கிரண்குமார், அனன்யா, கல்யாண், நரசிங் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். ஜெ.தன்ராஜ் தயாரிக்கும் இப்படத்திற்கு கோல்டி சன்னி, பிரணய் குமார் ஆகியோர் இசையமைக்கின்றனர்.

ஓடும் பஸ்சில், டெல்லி மாணவி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு, பின்னர் மரணமடைந்த சம்பவத்தை, "நிஷா" படத்தின் கிளைக்கதையாக வைக்க, இயக்குனர் ரமணா கட்டம் முடிவெடுத்துள்ளார்.

உணர்வு பூர்வமானதொரு துன்பியல் சம்பவத்தை, காட்சிப்படுத்தி பணம் சம்பாதிக்கும் நோக்கத்தில், டெல்லி மாணவிக்கு நேர்ந்த அந்தக் கோரச் சம்பவத்தை, படமாக்க நான் விரும்பவில்லை. நமது நாட்டில் நடைபெறும், இதைப் போன்ற காட்டுமிராண்டித்தனமான சம்பவங்களின் மூலம், மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் தான், இந்தக் கதையை "நிஷா" திரைப்படத்தில், கிளைக்கதையாக உருவாக்கியுள்ளேன் என்றார்.

இந்தக் கிளைக்கதையைத் தவிர, கமர்ஷியல் சினிமாவுக்கு தேவை யான அத்தனை அம்சங்களுடனும் கூடிய மூலக்கதையும், இப்படத்தில் உள்ளது எனவும் கூறியுள்ளார்.

## முத்தக்காட்சிகளில் நடிக்க மாட்டேன்: நடிகை லட்சமிமேனன்



'சுந்தர பாண்டியன் ','கும்கி' ஆகிய வெற்றிப்படங்களில் நடித்தவர் நடிகை லட்சுமி மேனன். இரு படங்களுமே பெரியளவில் வெற்றி பெற்றதையடுத்து, தற்போது ரொம்பவும் புத்துணர்ச்சி பெற்றுள்ளார். தற்போது சசிகுமாருடன் 'குட்டிப்புலி' விமலு-டன் 'மஞ்சப்பை' ஆகிய படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். முந்தைய படங்களைப்போன்று, இந்தப் படத்தில் கிராமத்துப் பெண்ணாகத்தான் நடிக்கிறாராம். இது குறித்து லட்சுமேனன் கூறுகையில், சினிமாவில் ஒரு நல்ல நடிகையாக வேண்டுமென்றுதான் நடிக்க வந்தேன். வந்த வேகத்தில் அதற்கேற்ற படங்கள் கிடைத்தன. அதனால் நல்ல நடிகை என்ற பெயரை-ரயும் பெற்றுவிட்டேன்.

அதே நேரத்தில் முன்னணி நடிகர்களுடன் நடிக்க வேண்டும் என்ற ஆசையம் உள்ளது. ஆனால் அஜித், விஜய், சூர்யா ஆகியோருடன் நடிக்க வேண்டுமென்றால், பாடல் காட்சிகளில் கவர்ச்சியாக நடிக்க வேண்டியிருக்கும். கூடவே, முத்தக்காட்சி, அதிக நெருக்கம் என்றெல்லாம் காட்சி வைப்பார்கள். எனக்கு அது சரிபட்டு வராது. அதனால்தான் அவர்களுடன் நடிக்க வேண்டும் என்ற ஆசையை, தள்ளி வைத்துவிட்டேன். எனக்கு பொருத்தமான கதாபாத்திரங்கள் அமை யும் படங்களில் மட்டுமே நடிக்கும் முடிவில் இப்போது இருக்கிறேன் என்றார்.

கொஞ்சகாலம் சினிமாவில் இருந்தாலும், பேர் சொல்லும் நடிகையாகஇருந்துவிட்டு போகவேண்டும் என்பதே, என் விருப்பம் எனவும் கூறியுள்ளார்.



# கவிதைப் பூங்கா



## புதுமகளே, நீ வா, வா

துன்பப்பட்டோம்
துயரத்தில் மூழ்கிக் கிடந்தோம்
சொல்லவோ வார்த்தையில்லை,
ஊர் இழந்தோம்.
உறவுகள் இழந்தோம்.
சொந்த வீடிழந்தோம்.
அங்கங்களையும் இழந்து – இன்று
சிறகொடிந்த கிள்ளை போல்
செங்குருதி வடிக்கின்றோம்.
காலங்கள் நகர்கின்றன
இந்நிலையில்,
புதிய ஆண்டினை மகிழ்வுடன்
சுமந்து வருகின்ற புதுமகளே – எமக்கு
நல் அமைதியைத் தந்திட வா
தோண்டப்பட்டிருக்கும்
புதைகுழிகளை மூடி
சமாதானக் காற்றை
நித்தமும் நாம் சுவாசித்திட
நல்வழியைத் தந்திட வா.
உறவுகளை ஒன்றிணைத்து
புத்தகமும் அமைத்து
இன்புற்று வாழ
ஏங்கிநிற்கும் எங்களுக்கு
புது வாழ்வுதனைத்
தந்திட வா வா...

- இளையபாரதி -
அம்பாறை.



## ஏன் தெரியுமா?

உன் அன்பின்
போர்வைக்குள்
ஒன்றாக உறங்க வேண்டும் என
இவ் ஆண்டு இறைவனை நான்
பிராத்திக்கப் போவதில்லை

இரணியன்
யாழ்ப்பாணம்.



## திருமணநாளில்...

திருநிறைச் செல்வனும்
திருநிறைச் செல்வியும்
இறைவனின் திருவருளுடன்
பெரியோர்கள் முன்னிலையில்
திருவாளர் – திருமதியாவது
திருமணநாளில்....

பிறந்த வீட்டை விட்டு
புகுந்த வீட்டுக்கு வரும் நேரம்
மாமா – மாமியாக மாறுவது
திருமணநாளில்....

பால் குடத்தில் மறைந்திருக்கும்
தங்க மோதிரத்தை
தம்பதிகள் தேடி எடுப்பது – இந்த
திருமணநாளில்...

ஏழரை என்னும் சனீஸ்வரன்
தம்பதிகளின் பின்னால்
பிறப்பெடுப்பதும்
பின் தொடர்வதும் – இந்த
திருமணநாளில்...

வீ.அருள்ராஜா
பாடசாலை வீதி
கொம்மாந்துறை.

## காதல் கனவு

அழகான உடையுடன்
அன்னம் போல் நடையுடன்
ஆடவர்களை ஆழ்த்தும்
அபிநய பார்வையுடன் – நீ
என் எதிரே வந்து விட்டாய்!
ஆசையுடன் உனை அழைத்து
அன்பு மொழி நான் பகிர்ந்தேன்
பதில் சொல்வாயென காத்திருக்க
சிவ பூசையில் கரடி போல்
கூவியது சேவல்
அய்யோ!
அப்போது தான் தெரிந்தது
அனைத்தும் – என்
கனவு என்று.





திலீபன்
ஆட்காட்டிவெளி
மன்னார்.



## நானும் காதலிக்கிறேன்.

அவள் பெண்ணல்ல
என்றான் என் நண்பன்.
பிசாசா? என்றேன் நான்.
இல்லை,
தேவதை என்றான்.
நக்கலாய் சிரித்தேன் நான்
இப்போது உணர்ந்து கொண்டேன்.
அது எவ்வளது உண்மையென்று.
ஏனென்றால்..,
நானும் காதலிக்கிறேன்.

கவிஞன் தாரணி
கோப்பாய்

## தொடர்கதை

மனிதரென நம்பினோம்
மரணத்தைத் தந்தீர்கள்
புனிதர் என நம்பினோம்
புதைகுழிக்குள் தள்ளிவிட்டீர்கள்

முகவரி தொலைந்த
முகங்களாய்
முட்கம்பி
வேலிக்குள் நாம்

தொலைந்து போனவர்களை
தொடர்ந்து தேடுகிறோம்
முடிவு காணாத்
தொடர்கதை போல்

சிறகழக்கும் முன்பே
இறக்கைகள் உடைந்து
குருதி மழையில்
நைனைந்து கொண்டிருந்தது
அந்தப் பறவை

பொன். நவநீதன்
பாண்டிருப்பு - 02
கல்முனை



## பிரிவு

வரைந்த கோடுகள்
வளைந்து போனதால்
இணைந்த கோடுகள்
பிரிந்து போகுதே...

இறைவன் வரைந்த
இரண்டு கோடுகள்
இணைந்து வாழ மறுப்பதேன்...

இருவர் வரைந்த
இன்பக் கோடுகள்
அல்லல் கண்டு தவிக்கின்றதே.
இடையில் நின்று விழிக்கின்றதே...

அடுத்தவர் பார்த்து சிரிப்பதா
அயலவர் பார்த்து ரசிப்பதா
இருவர் தம்மை புரிந்து கொண்டால்
இல்லற வாழ்வு சிறக்குமே...

டி.துரை
வித்தியாபுரம்
ஒட்டுசுட்டான்.



## புத்தாண்டே வருக

இயற்கையும் செயற்கையும்
எதிர்களாக ஆனது நமக்கு – இதனால்
மக்களின் இன்னல்கள் எண்ணிலடங்கா.
புதுவித இன்னல்களைப் போக்கி
புத்தாண்டை சந்தோசமாக்குவோம்.
புத்தாண்டே இன்னல் துடைத்திடுவாய்.
புதுக்கனவுகளை நெஞ்சில் சுமந்து
அவற்றை நிறைவேற்றவே
புத்தாண்டே உன்னை வரவேற்கிறேன்.
மனம் நெகிழ்ந்திடவே!.


மு.சுகந்தன்.
துன்னாலை கிழக்கு

### கவிதைப்பூங்கா வாசகர்களுக்கு...

தாங்கள் கவிதைப்பூங்காவுடன் கொண்டுள்ள இறுக்கமான பிணைப்பிற்கு என்றும் நன்றிகள். வாசகர்களின் கவிதைகள் நிறையவே குவிகின்றன. இடம் கொடுக்கும் நோக்குடன் கவிதைகளை 16 வரிகளுக்குள் மட்டுப்படுத்துவதுடன் தரமானதாகவும் அனுப்பி வைக்குமாறு வினயமாக வேண்டுகின்றோம்.



# புனைகதைப் புயல்



சிறுகதை


# துரோகம்

அன்றொரு நாள் பள்ளிப்பராயம், கடும் மழை, சோ என்ற பேரிரைச்சலுடன், மரம் செடிகொடிகள், அங்குமிங்கும் பேயாட்டம் ஆடின. கண்ணைப் பறிக்கும் மின்னல் கீற்றுக்கள், காதை செவிடாக்கும் இடி முழக்கம். நான் மழையில் நனைந்தபடி ஓடினேன். அந்தநேரம் ‘‘துரோகம்... துரோகம்’’ என்ற ஓர் ஒலி என் காதினில் ஒலித்தது. திரும்பிப் பார்த்து, ஓ என்று அலறிவிட்டேன். காரணம், அந்தப் பெரியவரின் தோற்றம், நீண்ட தாடியும், அடர்த்தியான தலை முடியும், கிழிந்த மேலங்கியும், அழுக்கேறிய துணியொன்றினால் இடுப்பைச் சுற்றியும் கட்டியிருந்தார். அவரைப் பார்த்தும் ‘‘என்னைப் பிடித்துக் கொண்டு போகிறாரோ’’ என்று எண்ணினேன். ஓ என்று அழுதேன். அழுவதையும் நிறுத்தாமல், ஓட்டத்தின் வேகத்தினையும் குறைக்காது ஓடி ஓடி, வீட்டிற்குச் சென்று விட்டேன். ‘‘தம்பி ஏன் என்ன நடந்தது? என்ன நடந்தது? பயப்படாதே, அம்மா இருக்கிறன்’’ என்று கூறி அம்மா என்னை அணைத்துக் கொண்டார். வழியிலே நடந்தவற்றைக் கேட்டார். நானும் ஒன்றைக் கூட விடாது கூறினேன். அம்மா சிரித்து விட்டு’’ இவருக்கா பயந்தனீ? அவர் நல்லவர் அப்பா, ஒருவருக்கும் ஒரு துரோகமும் செய்ய மாட்டார்’’ எனக் கூறினார். எனக்கோ ஒரே அதிசயம்.

அதனைத் தொடர்ந்து நான் பாடசாலை செல்லும் வழியிலே, அவரை எப்போதும் காணுவேன். ‘‘துரோகம் துரோகம்.. துரோகம்’’ என்ற நான்கு எழுத்தைத் தவிர, அவர் வாயில் எதுவும் வராது. எனக்கு பயமும் தெளிந்தது. மேலே கல்வியைத் தொடர்வதற்காக, நான் வேறு இடத்துக்குச் சென்றுவிட்டேன். மீண்டும் திரும்பி எனது ஊருக்கு வரும்போது, அவர் இன்னும் கோலம் மாறி இளைந்திருந்தார். அப்போதும் ‘‘துரோகம்.. துரோகம்... துரோகம்’’ என்ற சத்தம் தான். இவர் ஏன் இப்படிக் கூறுகிறார். இவருக்கு என்ன நடந்தது, என்பதை எல்லாம் அறிய எனக்கு ஆவலாக இருந்தது. ஊரில் உள்ளவர்களுடனும் சில நேரம், இதைப் பற்றிக் கேட்பேன். அவர்களும் ‘‘தம்பி அவர் நல்லவர்’’ என்று தான் கூறினார். இந்தச் சொல்லைத் தானே நான் திரும்பத் திரும்பக் கேட்கிறேன். இதன் அர்த்தம் புரியவில்லையே, எனக் குழப்பத்தோடு வீடு சென்றேன். அம்மா அந்த பெரியவர் ஏன் அவ்வாறு கூறுகிறார் எனக் கேட்டு விடாப்பிடியாக அந்தக் கதையை கேட்க ஆவலுற்றேன். ‘‘தம்பி அது பெரிய துன்பக் கதையப்பா’’ என்று கூறியதும், என்ன அம்மா அப்படி யார் அவருக்கு, துன்பம் செய்தவர்கள் எனக் கேட்டேன்.

அம்மா கதையைக் கூற ஆரம்பித்ததும், நான் அமைதியாக இருந்து செவிமடுத்தேன். ‘‘தம்பி அவருக்குப் பெயர் விஜயன், அவருடைய நன்பனுக்கு, குகன் என்று பெயர் கூறுவார்கள்.’’ எனக்கு வேறு பெயர் தெரியாது. பாடசாலையில் கல்வி கற்கும் பொழுதினில் இருந்தே இருவரும் நல்ல நன்பர்கள். குகன் ஏதாவது குறும்புகள் செய்து விடுவான். ஆசிரியர் பிரம்பு எடுத்து அடிக்கப் போனால், தனது நன்பனைக் காப்பாற்றுவதற்காக, விஜயன், ‘‘சேர் நான்தான் செய்தனான். அவனை அடிக்காதையுங்கோ’’ என்று கத்துவான். ஆசிரியர், மாணவர்கள் எல்லோருக்கும் பெரும் அதிசயம். ‘‘இப்படியும் ஒரு நண்பனா’’ என்று. குகன், சகபாடி மாணவர்களுடன் அடி தடியிலும் இறங்குவான். அந்த நேரம் விஜயன் தடுத்து நிறுத்தி, அவர்களிடம் மன்னிப்புக் கேட்பான். ‘‘டேய் அவனக்கு ஒன்றும் செய்யாதிங்கடா, எனக்கு அடியுங்கடா, என்னைத் திட்டுங்கடா, அவனுக்கு அம்மா இல்லையடா பாவம்டா.’’ என்று அவன் செய்த குற்றங்களையெல்லாம் சிறு துளியாக மன்னித்து விடுவான். தான் படிக்கும் பாஸ்பேப்பர், புத்தகங்களை எல்லாம், தனது வீட்டாருக்கும் தெரியாது, எடுத்துக் கொண்டுபோய் படிக்கக் கொடுப்பான். ‘‘குகன் நல்லாய் படியடா என்னுடன் நீயும் வந்திட்டா. நீ இல்லாமல் நான் ஓரிடமும் செல்லமாட்டனடா’’ எனக் கூறி ‘‘படி படி என உற்சாகமூட்டுவான்.

மேலே படிப்பதற்காக தன்னுடனே சித்தி பெறவும் செய்து, இருவரும் படித்து முடித்து, நல்ல வேலையிலும் இணைந்து கொண்டார்கள். எப்போதும் இணைபிரியாது ஒற்றுமையாகவே இருந்தார்கள். விஜயனுடைய வீட்டிலும் குகனுக்கு நல்ல வரவேற்பு. விஜனுக்கு பொல்லாத விதி போலும், பெற்றோர்கள் திருமணம் நிச்சயித்து விட்டார்கள். அதற்கு விஜயன் ‘‘அம்மா என்ன வேலை செய்கின்றீர்கள்?



அவனுக்கும் அம்மா இல்லை. உறவினர் யாரும் இல்லை அது உங்களுக்குத் தெரியும் தானே? அவனுக்கும் நல்ல இடமாக பார்த்து பெண் பேசுங்கள். இரண்டு பேருக்கும், ஒரே மணவறை யில் வைத்துத் திருமணம் நடக்க வேண்டும் என்றான். அவர்களும் எத்தனையோ இடம் பேசிப் பார்த்தார்கள். எதுவும் சரியானதாக வரவில்லை. அதனால் ‘‘முதலில் விஜயனுக்குக் கட்டுவோம், அடுத்து வரும் வரன்களை பார்த்து, குகனுக்கு செய்வோம் என விஜயனின் பெற்றோர் முடிவெடுத்தனர். அது மட்டும் குகன் எங்களுடனேயே இருக்கட்டும்’’ என்று அம்மா கூறினார். குகனும் ‘‘விஜயா அதுதாண்டா நல்லது, அவசரப்பட்டு என்னை தள்ளிவிடாதே’’ என கெஞ்சினான். குகனில் இரக்கப்பட்ட விஜயன், ‘‘சரி உனது விருப்பம்’’ எனக் கூறி தனது திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தான். இருவரும் சேர்ந்தே பெண்னைப் பார்த்தார்கள். ‘‘நல்ல லட்சணமானவள் தாண்டா, உனக்கு பொருத்தமானவள், அடக்கமானவளும் கூட.’’ என குகனும் சான்றிதழ் கொடுத்தான். திருமணம் நல்லதொரு நாளில் நிறை வேறியது. விஜயனுக்கு மனதிலே ஒரே குழப்பம், ‘‘எனது நண்பனுக்கு இன்னும் திருமணம் முடிக்கவில்லையே’’ என்று. நண்பர்கள் இருவரும் வேலை விடயமாக சென்று விட்டனர்.

குகன் தனக்கு வேலை செய்யும் இடத்திலேயே, ஒரு விடுதி ஒன்றை எடுத்திருந்தான். விடுமுறை தினத்திற்கு நண்பனிடம் வீட்டிற்கு வருவான். விஜயனுக்கும் அது பிடித்தது. ஒற்றுமையாகவே இருந்தார்கள். ஒரு நாள் விஜயன் தனது கம்பனி வேலை விடயமாக, மேற்படிப்பிற்கு வெளியூர் செல்ல வேண்டியிருந்தது. ஆறுமாத காலம் எப்படி இருப்பது என சங்கடத்துடன் போவதாக முடிவு செய்தான். ‘‘குகன் நான் வர ஆறுமாத காலமாகுமடா, நீ அடிக்கடி வீட்டிற்குப் போ. அம்மா, அப்பா தேடும் வரன் சரிவந்தால் என்னை எதிர்பாராதே. திருமணத்திற்கு சம்மதம் தெரிவி. அடிக்கடி என்னுடன் பேசு. உன்னை பிரிந்து இவ்வளவு காலமும் இருந்ததே இல்லையடா. எனக்கு நல்ல பதில் கூறவேண்டும்’’ எனக் கூறி வெளியூர் சென்றுவிட்டான். தனது மனைவியையும் விட, நண்பனிலேயே அதிகம் பாசம் கொண்டிருந்தான் விஜயன். இது அவனது மனைவிக்கு சற்று வருத்தமாகவே இருந்தது அதை அவள் வெளிக்காட்டவில்லை.

குகன் அடிக்கடி விஜயன் வீட்டிற்கு வருவான். விஜயனின் மனைவியானவள் அவனை நன்கு கவனிப்பாள். ஆரம்பத்தில் யாரும் அதை தவறாக எண்ணவில்லை. இவ்வாறு காலப்போக்கில் படிப்படியாக அவர்கள் நட்பு வளர்ந்து மோசமடைந்து விட்டது. விஜயனின் அம்மாவும் இதையெண்ணிக் கவலையடைந்திருந்தார். நண்பன் கோல் பண்ணினால் மட்டும் குகன் கதைப்பான். ‘‘நான் நல்லாய் இருக்கிறண்டா. நீ கவனமாகப் படி, வீட்டைப் பற்றி யோசிக்க வேண்டாம். நான் நன்றாக பாத்துக் கொள்கிறேன்’’ என்பான். விஜயனும் அதை முழுமையாக நம்பினான். படிப்பை முடித்துவிட்டு வீட்டிற்கு வர, விஜயன் ஆயத்தமானான். ஆனால் வரும் நாள் தான் திடீரென இருந்ததால், அறிவிக்காமலே வீட்டிற்கு வந்துவிட்டான்.

விஜயன் மிகுந்த ஆசையுடன் நன்பன், தாய், தந்தையர், மனைவி எனக் கற்பனை பண்ணிக்கொண்டே வீட்டிற்கு வந்தவன், அனைவருக்கும் ஓர் இன்ப அதிர்ச்சி கொடுக்க எண்ணி, கேற்றை மெதுவாகத் திறந்துகொண்டு, சத்தமில்லாமல் உள்ளே சென்றவன், தனது உயிர் நண்பனும், தனது மனைவியும் நெருக்கமாக இருந்து இன்பமாக உரையாடுவதைப் பார்த்ததும் அதிர்ச்சியுற்றான். அந்த இடத்திலேயே தலை சுத்தி மூச்சையிழந்துவிட்டான். அம்மா ஓடிவந்து ‘‘விஜயா எனடா, என்னடா தம்பி’’ எப்பவந்தநீ? என்ன நடந்தது? என அலறினாள். தனது மகனின் வாழ்வு சீரழிந்து விட்டதே என மனதுக்குள் ஏங்கிய அம்மா, அந்த இடத்திலேயே மரணத்தை தழுவிக் கொண்டார். தந்தையார் தனிமரமாகி திக்கற்றவனாகினார். விஜயன் அறிவு தெளிந்து எழுந்தவுடன் ‘‘அம்மா’’ என பெரிய சத்தத்துடன், விம்மி விம்மி அழுதான். அன்று தொடக்கம் வேலைக்குச் செல்வதில்லை. மூளை குழப்பமுடையவனானான்.

சிறு வயதில் இருந்தே, எல்லாம் நண்பனுக்காகவே நண்பனுக்காகவே, எனச் செய்த விஜயன், அவனது வாழ்க்கையில் நண்பன் விளையாடிவிட்டான். அன்று தொடக்கம் இன்று வரை ‘‘துரோகம்... துரோகம் என்ற நான்கு எழுத்துக்கள் மட்டும் தான், விஜயனின் வாயில் வரும்’’ என அம்மா கூறி முடித்ததும், அந்த பெரியவரில், அதிகமான மரியாதை உடையவனானேன். பெரியவரை சந்திக்க வேண்டும் என்ற ஆசையில், அவரைத் தேடி ஓடினேன். என்ன அதிசயம் மர அடியிலே, அந்த பெரியவர் சடலமாகக் கிடந்தார். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ‘‘உடனே அங்குள்ள ஊர் பெரியவர்களை ஐயா, அம்மா வாருங்கள்’’ எனக் கூறி அந்த பொது இடத்திலேயே பந்தலிட்டு, சகல மரியாதை களுடன் அவருக்குரிய கிரிகை முறைப்படி தகனம் செய்தேன். அந்த பெரியவரின் ஆத்மா சாந்தி அடைய வேண்டும், என எண்ணினேன். இன்னும் எனது காதில் ‘‘துரோகம்...: துரோகம்...’’ என்ற ஒலி கேட்டுக் கொண்டேதான் இருக்கின்றது.


- முற்றும் -

யோகா ரட்ணகுமார்.
ஆசிரியை
குமுழமுனை மகாவித்தியாலயம்.

# ஆன்மீக உலகம்

## தென்கிழக்காசியாவில் இந்துசமயத்தின் பரம்பல்

சென்றவாரத் தொடர்ச்சி...



கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது, ஆன்றோர் வாக்கு. அதற்கு இணங்க, சிங்கப்பூர்த் தீவில், தமிழர்கள் அடி எடுத்து வைத்த காலம் முதலே, ஆலயங்களையும் எழுப்பிவிட்டனர். பிற வல்லரசுகள், தங்கள் வலிமையான கடற்படையுடன், வணிகத் தொடர்புகளை அதிகரித்தனர். ஆனால் தமிழர்கள் தென் திசை நாடுகளில், தங்கள் கலை பண்பாட்டுத் தொடர்புகளையே கொண்டிருந்தனர். அந்தச் சின்னங்கள் இன்றும் நிலைத்து, நம் தொன்மையான கலாச்சாரச் சிறப்பை, வெளிப்படுத்திக் கொண்டு இருக்கின்றன. இந்து சமயத்தின் வளர்ச்சிக்கு சைவமும், வைணவமும் சேர்ந்தே பங்காற்றியுள்ளன. இந்துக்கள் தங்கள் சமயத்தை எப்போதுமே, பலவந்தமாகப் பரப்புரை செய்திட வில்லை. தென்கிழக்காசியா வட்டாரத்திற்கு, இந்து சமயம் அமைதி யான முறையிலேயே பிரவேசமானது. வர்த்தகர்கள், பயணிகள், கல்விமான்கள், சமய போதகர்கள் போன்றோர், இவ்வட்டாரத்திற்கு மேற்கொண்ட பயணங்களின் விளைவாக, இந்து சிந்தனைகள் இங்கு பரவின. முதலாம் நூற்றாண்டில், இவ்வட்டாரத்தில் செயற்பட்ட, இந்தியக் குடியேற்றங்கள் அதற்கு மேலும் உறுதுணையாக விளங்கின.

வியட்நாமில் இந்து ராஜ்ஜியமான சம்பா, கி.பி 159 ஆம் ஆண்டுக்கும், 200 க்கும் இடையில் தோற்றுவிக்கப்பட்டது. சம்பா மன்னன் ஸ்ரீ பத்ரவர்மா, இரண்டாம் நூற்றாண்டில், மைசோன் எனும் இடத்தில் பெரும் இந்துக்கோவிலை எழுப்பியதற்கான வரலாற்று ஆதாரங்கள், தென்கிழக்காசியாவில் வியட்நாமில், செயற்பட்டு வந்த சம்பா பேரரசு, சுமத்ராவில் செயற்பட்டு வந்த விஜயப் பேரரசு, ஜாவாவி லும் பாலியிலும் செயற்பட்டு வந்த சிங்கசாரி, மஜபாஹிப் அரசுகள், பிலிப்பைன்சைச் சேர்ந்த தீவுகள் ஆகியவற்றில், இந்து சமயம் தழைத்துக் கோலோச்சியிருந்தது. "காம்போஜம்" என்று இந்தியர்களால் அழைக்கப்பட்ட கம்போடியா (கம்பூச்சியா), தென் கிழக்காசியாவிலேயே ஆக அதிக இந்து ஆதிக்கமுள்ள நாடு. அங்கு வைணவமும், சைவமும் கை கோர்த்துத் தழைத்தன. சிவபெருமானை வணங்கியது போலவே, விஷ்ணுவையும் கம்போடிய மன்னர்கள் வழிபட்டு வந்தனர்.

கம்போடியாவில், கி.பி 1122 ஆம் ஆண்டில் அமைந்த சிவன் கோவில், அங்கோர்வாட் என்னுமிடத்தில் இன்றும் இருக்கிறது. உலக நினைவுச் சின்னமாகப் போற்றப்படும், அங்கோர் வாட்டில், இரண்டாவது மன்னன் சூர்ய வர்மன், அந்தக் கோயிலைக் கட்டினான். வைணவத்துடன் இந்த வட்டாரத்தில் சைவ சமயமும் கைகோர்த்து வளர்ந்தது என்பது, வரலாற்று வல்லுநர்களின் கருத்து. இவ்வட்டாரத்தில் காணப்படும் சிதைந்த நகரங்களும், கோயில்களும், இதர சமயச் சின்னங்களுமே இதற்குச் சான்று. உலகப் பாரம்பரியச் சின்னங்களாக இவை ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பர்மியர்களிடையே விஷ்ணு வழிபாடு பரவலாகக் காணப்படுகின்றது. பல கல்வெட்டுகளில் அதற்கான ஆதாரங்கள் உள்ளன. பர்மாவின் பழங்கால தலைநகர மான புரோம், வைணவ வழிபாட்டின் மையமாகத் திகழ்கிறது. புரோம் நகருக்கு "புகநாம்யோம்" என்ற பர்மியப் பெயரும் வழக்கத்தில் உண்டு. இதற்கு பொருள் விஷ்ணுபுரம் என்பதாகும்.

இன்றும் கூட தாய்லாந்து மன்னர்கள், ராமா என்ற அரச பரம்பரைப் பெயரைக் கொண்டுள்ளனர். இராமாயணக் கதை, அரச மாளிகை யின் சுவர்களை அலங்கரிக்கின்றன. தசரா போன்ற இந்து விழாக்கள், இன்றும் அங்கு அனுசரிக்கப்படுகின்றன. தாய்லாந்து மக்கள் மகா விஷ்ணுவை, பிரா நாராயணன் என்ற பெயரில் வழிபடுகின்றனர். சயாமிய இலக்கியங்களில், இராமாயணத்துக்கும், மகாபாரதத்துக்கும் பெரும் பங்கு உள்ளது. இன்றும் கூட, தாய்லாந்து மன்னருக்கு முடிசூட்டும் போது, திவ்ய பிரபந்தம் போன்ற, இந்து மந்திரங்கள் ஓதப்படுகின்றன. ஜாவாவில் இரண்டாம் நூற்றாண்டிலிருந்து, இந்தியர்கள் குடியேறினர். வைணவ சமயத்தின் தாக்கத்தை ஜாவா தீவின் மத்திய பகுதியில், அதிகம் பார்க்க முடிகிறது. போரோப்தூருக்குச் செல்வோர் அருகிலுள்ள, சண்டி பாயோன் கோயிலில், பல அழகிய இந்து விக்கிரகங்களைக் காண முடியும். ஜாவாவின் ஆகப் பெரிய இந்து கோயில் பெரம்பனான். பத்தாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இராமாயணத்தைச் சித்தரிக்கும் பல சிற்பங்கள் உள்ளன. சுமாத்திராவின் ஆகப் பழமையான சாம்ராஜ்யம் ஸ்ரீ விஜயா. நான்காம் நூற்றாண்டுகளில் இது தோற்றுவிக்கப்பட்டது.

மத்திய ஜாவாவில் பெரம்பனான் என்ற இடத்தில், மூன்று பிரகாரங்களுடன் அமைத்த, மிகப்பெரிய சிவன் கோயில் ஒன்று இன்றும் உள்ளது. இது கி.பி 929 இல் கட்டப்பட்டது. இக்கோயிலை இந்தோனேசியர்கள் சிவ திஜாண்டி என்று குறிப்பிடுகின்றனர். ஜகார்த்தாவில் (கி.பி 775-782) அமைந்துள்ள போராப்புதூர் ஆலயம் பல சதுர மைல் பரப்பை கொண்டது. விஷ்ணு ஆலயத்தில் சிவன், திருமால், அம்பாள், விநாயகர் சிலைகள் உள்ளன. இங்கு பிரம்மா, சிவன், விஷ்ணு என்ற மும்மூர்த்திகளையும் வணங்குகின்றனர். துர்க்கா தேவிக்குத் தனிக்கோயிலும் இங்கு அமைந்திருக்கின்றது.

**பாலித் தீவு இன்றும் இந்து ராஜ்யமாகவே இருந்துவருகிறது.**

சீனாவிலும் இந்து சமயத்தின் தாக்கங்கள் இருந்திருக்கின்றன. அங்கு தென்கிழக்குச் சீனப் பகுதிகளில், இந்து மதத்தைப் பின்பற்றும் சமுகம், இன்றும் இருக்கிறது. இந்து சமயத்தின் யோகம், வர்மக் கலைகள் போன்றவை சீனப்பண்பாட்டில் ஏற்படுத்திய தாக்கம் மிக அதிகம். சீனாவின் சுன்வுகாங் என்ற புராண பாத்திரம், அனுமாரைத்தான் உருவகித்தது என்று சொல்பவர்களும் உண்டு. சீன அரசியல் மாற்றங்கள். இந்து சமய வளர்ச்சியை அங்கு மட்டுப்படுத்தியது. சீனத்தின் ஒரு பகுதியான திபெத்தில், இந்து சமயம் அதிகமாகவே இருக்கிறது. புத்த மதத்தைப் பின்பற்றுபவர்கள் கூட, இந்து சமய நெறிகளைப் பின்பற்றுவதும், இந்து சமய விழாக்களில் பங்கு கொள்வதும் அங்கு அதிகமாவுள்ளது.

ஜப்பான் நாட்டிலும் இந்து சமயத்தின் தாக்கத்தைக் காண்கிறோம். அதிகம் இல்லையெனினும், அங்குள்ள புடக்ககோ தமகாகோ கோயிலில் விநாயகப் பெருமான் சிலைகள் இருப்பது, இந்து சமயத்தின் பரவலைக் காட்டுகிறது. 13ஆம் நூற்றாண்டில் ஸ்ரீ விஜய சாம்ராஜ்யமாக இந்தோனேசியா இருந்தபோது, "துமாசிக்" என்ற பெயரில், சிங்கப்பூர் விளங்கியது. பரமேஸ்வரன் ஆட்சியில் இருந்துதான், அப்போது சிங்கப்பூர் ஆற்றின் முகத்துவாரத்தில், இந்துக்கோயில் ஒன்று இருந்ததாகக் கூறப்படுகிறது. 13 ஆம் நூற்றாண்டிலேயே சிங்கப்பூரில் இந்து கோயில் ஒன்று இருந்தது என்பதை, வரலாறுச் சான்றுகள் நமக்கு காட்டுகின்றன.

## இந்தோனேஷியாவில் அன்னை வேளாங்கன்னி திருத்தலம்



நாக பட்டினம் மாவட்டத்திலுள்ள, புதிய அன்னை வேளாங்கன்னி திருத்தலம் உலகப்பிரசித்தம் பெற்றது. எல்லா சமயங்களைச் சேர்ந்தவர்களும், இங்கு வந்து அன்னை மரியாவை வணங்கிச் செல்கின்றனர். வேளாங்கன்னி மாதாவைச் சிறப்பிக்கும் வகையில், ''அன்னை வேளாங்கன்னி" என்ற திரைப்படம் எடுத்த போது, மாதா மீதிருந்த பக்தியின் காரணமாக, அந்த படத்திற்குச் சம்பளம் வாங்காமலே நடித்துக்கொடுத்ததாக, முதல்வர் ஜெயலலிதா ஒரு விழாவில் கூறியிருந்தார்.

சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த, ஜேம்ஸ் சிங்கராயர் என்ற, இயேசு சபைத் துறவி, மதப்பணிக்கென இந்தோனேஷியா அனுப்பப்பட்டார். அங்கு அவருக்கு மோடன் என்ற நகரில், ஒரு மாதா கோவில் கட்டும் பொறுப்பு வழங்கப்பட்டது. இந்துக்கள் மத்தியில், அம்மனுக்கு பல பெயர்களும், பல தோற்றங்களும் இருப்பது போல, கத்தோலிக்க மதத்தில், மேரிமாதாவுக்கும் பல பெயர்களும், பல தோற்றங்களும் உண்டு. இதில் எந்த மாதாவின் கோவிலை மோடனில் அமைக்கலாம் என்ற பேச்சு வந்தபோது, பாதிரியார் ஜேம்ஸ், தமிழ்நாட்டில் பிரபலமாக இருக்கும், வேளாங்கன்னி மாதா பெயரில் கோவில் கட்டலாம் எனப் பேசி, அனைவரது சந்தோஷ மான சம்மதத்தையும் பெற்று, கோவில் கட்டத்துவங்கினார்.

தமிழ்நாட்டில் இருக்கும் தேவாலயங்கள் எல்லாம், ஐரோப்பிய நாட்டு கோபுரங்களின் சாயலை தாங்கிநிற்கும் போது, வெளிநாட்டில் முதன் முதலாக கட்டப்படும், வேளாங்கன்னி மாதா தேவாலயத்தை ஏன் தமிழ் கலாச்சாரத்துடன், அமைக்கக்கூடாது என்று எண்ணினார் பாதிரியார் ஜேம்ஸ். அவரது எண்ணம் ஈடேற, பலரது கடுமையான உழைப்பும், சில வருடங்களும் தேவைப்பட்டது. தமிழகத்தில் உள்ள வேளாங்கன்னியின் பக்தர்கள், (இதில் நிறையப் பேர் இந்துக்கள்) உட்பட பல்வேறு நாடுகளில் உள்ள பக்தர்களின் நிதியுதவியுடன், தேவாலயமும் ஏழு மாடங்களுடன், கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் பக்தர்களை வரவேற்றபடி, கம்பீரமாக எழுந்து நிற்கின்றது. இந்த மண்டபத்திற்கு கிறிஸ்தவர்கள் மட்டுமல்லாது, இந்துக்களும், புத்த மதத்தினரும் கூட, வந்து அமைதியா[...] தியானம் செய்துவிட்டு செல்கிறார்கள்.

இந்த ஆலயத்திற்கு, திட்டமிடாமல் கொடுக்கப்பட்ட, ஏழு வர்ணங்கள் இப்போது ஆழமான அர்த்தம் கொண்டுள்ளது. ஆரம்பத்தில் உள்ள கறுப்பு, பாவ இருளை குறிக்கிறது. அந்த பாவங்களுக்காக வருந்தி, அந்தத் தீய குணங்களை எரித்து, சாம்பலாக்கி விட்டால், வெள்ளை எனும் புனிதத்தன்மை வந்து சேருகிறது. சிவப்பு எனும் தியாகத்தை செய்யத் துவங்கி விட்டால், பச்சை எனும் வளமான வாழ்வு நம்மை வந்தடையும். அதையடுத்து மறுவாழ்வு, நீலமான வான்லோகத்தில் (சொர்க்கத்தில்) மேற்கண்ட தகவலை சொன்னவர், அந்த தேவாலயத்தின் பாதிரியார் ஜேம்ஸ் சிங்கராயர். இப்போது இவரது பெயர் ஜேம்ஸ் பாரதபுத்ரா. அந்த பாரத புத்ரா பெயருக்குப் பின்னால், ஒரு சின்ன சுவாரஸ்யமான கதையுண்டு. அதையும் அவரே சொல்கிறார். 1988 இல் குடியுரிமை பெற்றால்தான் இந்தோனேஷியாவில் தொடர்ந்து நீடிக்க முடியும், என்ற புதுச் சட்டம் வந்தது. சரியென நானும் குடியுரிமைக்கு விண்ணப்பித்தேன். ஆனால் இந்தோனேஷியப் பெயரைத்தான் பதிவுசெய்ய முடியும் என்று கூறிவிட்டனர். பாரதம், புத்திரன் போன்ற வார்த்தைகள் எல்லாம் இங்கும் உண்டு. எனவே இந்தோனேஷியக் குடிமகனாக மாறினாலும், பாரதத்தின் புத்திரனாகவே இருப்போம் என முடிவெடுத்து, "பாரதபுத்ரா" ஆனேன். என்று சிரித்தபடி சொன்னார், பாதிரியார் ஜேம்ஸ் பாரதபுத்ரா.

சென்ற வாரம் பிரசுரிக்கப்பட்ட கிறிஸ்தவ கட்டுரையின் தலைப்பை கத்தோலிக்கவாழ்வின் திரு முழுக்கு என திருத்தி வாசிக்கவும்

## நற்செயல்களால் நம்மை அலங்கரிப்போம்



*நீங்கள் உடலால் பேரழகனா, இல்லை பேரழகியா என்று அல்லாஹ் பார்க்க மாட்டான். மாறாக நீங்கள் உள்ளத்தால் அழகானவரா என்பதை மட்டுமே அல்லாஹ் பார்ப்பான். எனவே நீங்கள் உங்கள் உள்ளங்களை அழகு படுத்திக்கொள்ளுங்கள்.


*சமூகத்தில் நீங்கள் எந்தத் தரம் என்பதை அல்லாஹ் பார்க்கமாட்டான். நீங்கள் சமூகத்தில் எந்தத் தரத்தில், நடந்துகொண்டீர்கள் என்பதையே அல்லாஹ் பார்ப்பான். எனவே நற்பண்புகளால் நீங்கள் உங்கள் தரத்தை உயர்த்திக்கொள்ளுங்கள்.

*உங்களுக்கு எத்தனை வீடுகள், பங்களாக்கள் இருக்கின்றன என்று அல்லாஹ் பார்க்க மாட்டான். அவை களில் எத்தனை அநாதைகளுக்கு அடைக்கலம் தந்தீர்கள் என்றே பார்ப்பான். எனவே உங்கள் இல்லங்ளில் ஆதரவற்ற அனாதைகளுக்கு, அடைக்கலம் கொடுங்கள்.


*நீங்கள் என்னென்ன உணவு வகைகள் உண்டீர்கள், என்பதை அல்லாஹ் கேட்கமாட்டான். பசியோடு வந்த எத்தனை ஏழைகளின் பசியை நீங்கள் போக்கினீர்கள் என்றுதான் அல்லாஹ் கேட்பான். எனவே பசித்தோருக்கு உணவளியுங்கள்.

*நீங்கள் எத்தனை பிள்ளைகளை பெற்றீர்கள் என்பதைவிட, உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியையும், ஒழுக்கத்தையும் கற்றுத்தந்தீர்களா என்பதையே அல்லாஹ் பார்ப்பான். எனவே உங்களது பிள்ளைகளுக்கு, நல்ல கல்வியையும் நல்ல ஒழுக்கத்தையும் கற்றுக்கொடுங்கள்.

நற்செயல் என்பது உங்கள் முகங்களைக் கிழக்கிலோ, மேற்கிலோ திருப்பிக்கொள்வதில் இல்லை. ஆனால் அல்லாஹ்வின் மீதும், இறுதி (த் தீர்ப்பு) நாளின் மீதும் மலக்குகளின் மீதும், வேதத்தின் மீதும், நபிமார்கள் மீதும் ஈமான் கொள்ளுதல். (தன்) பொருளை இறைவன் மேலுள்ள நேசத்தின் காரணமாக, பந்துக்களுக்கும், அநாதைகளுக்கும், மிஸ்கீன்(ஏழை) களுக்கும், வழிப்போக்கர்களுக்கும், யாசிப்பவர்களுக்கும், (அடிமைகள், கடனாளிகள்) போன்றோரின் மீட்புக்காகவும் செலவு செய்தல். இன்னும் தொழுகையை ஒழுங்காகக் கடைப்பிடித்து முறையாக ஸக்காத் கொடுத்து வருதல், இவையே பொதுவான நற்செயல்களாகும் அல்குர்ஆன் 2:177



# அறிவியல் உலகம்



## சிறுநீரக கோளாறுக்கு அருமை மருந்தாக அமையும் வாழைத்தண்டு



சிறுநீர் சம்பந்தப்பட் நோய்களால் துன்பப்படுகிறவர்களின் எண்ணிக்கை, அதிகரித்துக் கொண்டிருக்கிறது. உடலில் உள்ள கழிவுகள், சிறுநீர் மூலம் வெளியேற்றப்படுகின்றது. சிறுநீரைக் கட்டுப்படுத்துவதாலோ அல்லது நோய் பாதிப்புக்களாலோ, சிறுநீர் சரிவர உடலை விட்டு வெளியேறாமல் இருக்குமானால், அது பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்.

சிறுநீரகத்தில் கல் உருவாவது, இன்று மிக பரவலாகக் காணப்படும் ஒரு நோய். அதிக காரமான உணவு, மிகக் குறைவாக நீர் அருந்துதல், வறட்சியான உணவு, மது அருந்தும் பழக்கம். அடிக்கடி சிறுநீரை அடக்குதல், போன்ற காரணங்களால், சிறுநீர் தடைபட்டு சிறுநீரகத்தில் கற்கள் உண்டாகின்றது.

சிறுநீரகக் கற்களை வெளியேற்ற மருந்துகளும், மருத்துவ முறைகளும் இருந்தாலும், நாம் உட்கொள்ளும் உணவு மூலம் சிறுநீரகக் கற்களை வெயியேற்றலாம்.

வாழைத்தண்டுக்கு சிறுநீரக கற்களை வெளியேற்றும் ஆற்றல் உண்டு.


வாழைத்தண்டை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்வதால், ஆரம்ப நிலையில் உள்ள கற்களை, மிக எளிதாகக் கரைத்து இது வெளியேற்றிவிடும். வாரம் மூன்று முறை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

வாழைத்தண்டு நார்ச்சத்து மிக்க உணவாவதால், அதிக உடல் எடையால் அவதிப் பகிறவர்கள், நீரிழிவு நோயாளிகள், இரத்தத்தில் கொழுப்புச் சத்து அதிகரித்து இருப்பவர்களுக்கு, இது மிகச் சிறந்த மருந்து. இது ரத்தத்தை தூய்மை செய்யும் இயல்புடையது.

இதற்கு உடலைக் குளிர்ச்சியடைய வைக்கும் தன்மையிருப்பதால், கோடை காலத்திற்கு மிகவும் ஏற்றது. வயிற்றுப் புண்ணைக் குணப்படுத்தும் சக்தியும் இதற்கு இருக்கிறது. மாதவிடாய் காலத்தில் இதை உணவில் சேர்த்தால், பெண்களின் உடல் பலமடையும். மாதவிடாய் கோளாறுகளால் ஏற்படும், அதிக ரத்தப்போக்கு, நோய்க்கு வாழைத்தண்டு மிகச் சிறந்த மருந்தாகவும் பயன்படுகிறது.

உடல் எடை குறைய, உணவுக் கட்டுப்பாட்டை மேற்கொள்பவர்கள், வாழைத்தண்டை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

## மீன் சாப்பிடுவதால் உண்டாகும் நன்மைகள்



மீன் சாப்பிடுபவர்கள், எந்த நோயைப்பற்றியும் கவலைப்பட வேண்டியது இல்லை. ஆஸ்துமா முதல் இருதய நோய் வரை, அனைத்தையும் தடுக்கும் மருத்துவ குணம் கொண்டது மீனுணவு. மீனில் கொழுப்பு இல்லை. அதிகமாக புரோட்டின் சத்து உள்ளது. இதில் "ஓமேகா 3" என்ற ஒரு வகை அமிலம், வேறு எந்த உணவிலும் காணப்படுவதில்லை. உடலில் எந்த நோயும் வராமல் தடுக்க, இந்த அமிலம் மிகவும் அவசியமாவுள்ளது.

ஆண் ஒருவர் நாள்தோறும் ஒருமுறை மீன் உட்கொண்டால், இருதயநோய், உயர் இரத்த அழுத்தம் ஏற்படும் விகிதத்தை, 30 சதவீதம் வரை குறைக்கலாம். 2 நாட்களுக்கு ஒரு முறை, மீன் உட்கொண்டால், உடலுக்குத் தேவைப்படும் சத்து, போதிய விகிதம் கிடைக்கும். ஆஸ்துமா நோய் வரவே வராது. அதுவும் குழந்தையில் இருந்து சாப்பிட்டு வந்தால், வாய்ப்பே இல்லை. மூளையின் செயற்பாட்டிக்கும், கண் பார்வைக்கும் மீன் உணவு மிகவும் பயனளிக்கிறது.

## ஆப்பிள் கன்னம் வேண்டுமா?



கன்னங்கள் ஒட்டி குழி விழுந்து போன பெண்கள், ஆப்பிள் போன்ற கன்னங்களைப் பொற, இதோ சில எளிய வழிமுறைகள் :


*. அடிக்கடி வாய்க்குள் காற்றை நிரப்பி, கன்னங்களை பலூன் போல் ஊதி, தொடர்ந்து ஐந்து நிமிடம் வைத்துக்கொள்ளுங்கள்.

*. காலையும், மாலையும் சிறிது நேரம், தண்ணீரை வாய்க்குள் வைத்து, பயிற்சி செய்வது போல, அங்கேயும் இங்கேயுமாக குலுக்குங்கள்.

*. வாய்க்குள் காற்றை நிரப்பி, இரண்டு கைகளிலும் உள்ள மோதிர விரல், நடு விரல், சிறிய விரல் ஆகியவைகளை ஒன்றாக்கி, கீழே இருந்து மேல் நோக்கி மசாஜ் செய்யுங்கள். தினமும் குறைந்தது 25 முறை, இப்படி செய்து வந்தால், கன்னங்கள் அழகுபெறும்.

*. குழி விழுந்த கன்னங்களைக் கொண்டவர்கள், அதிக கவனத்துடன் மேக் - அப் செய்ய வேண்டும். சிரிக்கும் போது, எலும்புகள் வெளியே தள்ளிக்கொண்டு தெரியும் விதத்தில் இருந்தால், அதில் சிறிதளவு "ரூஜ்"பூசுங்கள். அந்த குறை தென்படாது.

## இளைமையாக வாழ, ஆண்களுக்கான அழகுக் குறிப்புக்கள்.



ஆண்களில் சிலரைப் பார்த்தால், வயது 50 அல்லது 60 ஐத் தாண்டியிருப்பினும், என்றும் மார்க்கண்டேயனாகவே தோற்றமளிப்பர். இந்த மார்க்கண்டேய தோற்றத்தை, தக்கவைத்துக்கொள்வது ஒன்றும் பெரிய கம்ப சூத்திரமோ, அல்லது பிரம்ம வித்தையோ அல்ல. மாறாக கொஞ்சம் நேரத்தைச் செலவழித்தால், வயது ஏறிக்கொண்டு போனாலும், குறைந்த வயது தோற்றத்துடன் நீண்ட காலம் இருக்க முடியும்.

நமது வயதை முதலில் வெளிப்படுத்துவது சருமம் தான். அதனை ஒழுங்காக சீராக பராமரித்தாலே, நமது ஆயுட் காலமும் நீடித்து இருக்கும். அப்படி என்றும் இளமையுடன் இருக்க, இதோ சில குறிப்புகள்.

நாம் அதிகமாக சூரிய வெளிச்சத்தில் பயணிப்பதாலும், எண்ணெய் அதிகமுள்ள உணவுகளை உட்கொள்வதாலும், மாசுள்ள காற்றை சுவாசிப்பதாலும், நமது சருமத்தில் முதுமை தோற்றம் தெரிகிறது. இதனைத் தடுக்க, சிறந்த முதுமைப் தடுப்பு(ஆன்டி ஏஜிங்) தயாரிப்புகளை பயன்படுத்துவது நல்லது. மேலும் அதிகமான தண்ணீர் பருகுதல், சருமத்தை பாதுகாக்கும்.

பெண்களின் சருமத்தைக் காட்டிலும், ஆண்களின் சருமம், 20 சதவீதம் கூடுதல் கடினத்தன்மையுடன் இருக்கும். ஆயினும் வயது கூடும்போது, "கொல்லாஜன்" எனும் புரதம் குறைவதால், சருமத்தில் சுருக்கம் ஏற்படுகிறது. உடல் கூறுயலின்படி, பெண்களைக் காட்டிலும் ஆண்களின் முதிர்ச்சி, சில காலத்திற்கு பிறகு தான் தோன்றும். ஆனால் ஒரு சில பழக்கவழக்கங்களினால், ஆண்களுக்கு இயல்பான வயதை காட்டிலும், முதுமையான தோற்றம் காணப்படுகிறது.

தொடர்ந்து ஷேவிங் செய்வதன் காரணமாக, முகத்தில் முதிர்ச்சி தோன்றும். அதனால் ஈரப்பதத்துடன் கூடிய, ஷேவிங் க்ரீமை பயன்படுத்துவது நல்லது. மேலும் ஷேவிங் செய்யும்போது, முடிகள் வளர்ந்திருக்கும் திசையில் ஷேவ் செய்து, வெதுவெதுப்பான தண்ணீரால் முகத்தை கழுவவேண்டும். அவ்வாறு செய்தால், முகம் வாடாமல் புத்துணர்ச்சியுடன் தோன்றும்.


ஆண்கள் என்றும் இளமையுடன் இருக்க, தொடர்ந்த உடற்பயிற்சியும், பழங்கள், காய்கறிகள், பருப்பு வகைகள், உடலுக்கு குளிர்ச்சி தரும் இறைச்சி வகைகள், மற்றும் மீன் போன்ற ஆரோக்கிய உணவுகளை உட்கொள்ள வேண்டும். உடல் திசுக்களை புதுப்பிக்கும் திறனுடைய, "ஆன்டிஆக்ஸிடன்ட்" நிறைந்த, பேக் செய்யப்பட்ட உணவுகளை உட்கொள்வதால், முகம் சுருக்கம் இல்லாமலும், மென்மையாகவும் காணப்படும். அதிக அளவில் சுய இன்பம் காணுதலையும் தவிரத்தல் வேண்டும்.

மேலும் பசளைக் கீரை, அவுரிநெல்லி, கரட், தக்காளி, பச்சைச் தேநீர் போன்றவற்றையும், சேர்த்துக்கொள்வது மிகவும் நல்லது. சருமத்தை இளமையுடன் வைத்திருக்க, மது மற்றும் புகைப்பிடித்தலையும் முற்றாக தவிர்க்கவும். சிகரெட்டுகளில் உள்ள நிக்கோட்டின், உடலின் இரத்த ஓட்டத்தை குறைப்பதால், சருமத்திற்குத் தேவையான சத்துகள் சென்று அடைவதில்லை. ஆகையால் சுருக்கங்கள் ஏற்படும் வாய்ப்புக்கள அதிகமாக உள்ளன.

தூக்கம் கெடுவதால் உடல்நிலை பெரிதும் பாதிக்கப்படும் என்பதை, அநேகமானோர் அறிவதில்லை. இரவில் குறைந்தது 6-7 மணிநேர ஆழ்ந்த உறக்கம் அவசியம் என்பதும், இதைத் தொடர்ந்து கடைபிடித்து வந்தால், மனதில் புத்துணர்ச்சி மட்டுமன்றி, உடல் ஆரோக்கியத்திலும், குறிப்பாக சருமத்திலும் பொலிவு ஏற்படும். இது தவிர உடல் ஆரோக்கியத்திற்கும், உடலுறவு பழக்க வழக்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதால், அதுகுறித்த விழிப்புணர்வைத் தகுந்த மருத்துவரினூடக, கண்டிப்பாகப் பெற்றிருக்க வேண்டும்.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக, ஆண்கள் தனது கவலைகளை மறந்து மகிழ்ச்சியுடன் இருந்தாலே, முகத்தில் பொலிவும், இளமையும், கூடிக்கொண்டே போகும். குறித்த நேரத்திற்கு உணவு உட்கொள்ளல், போதியளவு நீர் அருந்துதல், பழவகைகள் மறறும் காய்கறி வகைகளை அதிகம் உட்க்கொள்ளல், பொன்றன பொதுவான ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும்.

## புதிய தொழில்நுட்பத்தில் வியக்கவைக்கும் A.T.M. இயந்திரம்




புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய வியக்கவைக்கும், ஏ.ரி.எம். (A.T.M) இயந்திரங்கள் அறிமுகமாகி உள்ளது. ஆஸ்திரேலியாவிலுள்ள காமன்வெல்த் வங்கி, தனது வாடிக்கையாளர்களுக்கு, கூடுதல் வசதியை ஏற்படுத்தி, இந்த வகையை சேர்ந்த புதுமையான 40 ஏ.ரி. எம். இயந்திரங்களை நிறுவி இருக்கிறது. இந்த ஏ.ரி.எம். இயந்திரத்தில் பணம், செக் போன்றவற்றை போட்டால், உடனடியாக அதை தமது வங்கிக் கணக்கில், சேர்த்து விடும். இதற்கு வாடிக்கையாளர் மத்தியில் வரவேற்பு இருப்பதால், இந்த ஆண்டு முடிவுக்குள், மேலும் 150 ஏ.டி.எம். இயந்திரங்களை நிறுவப் போவதாக, வங்கியின் பொதுமேலாளர் மைக்கேல் சாந்த் கூறினார். மேலும் அவர் இதன் செயல்பாடு குறித்து கூறுகையில், நாணயம், பணம் ஆகியவற்றை எண்ணிப் பார்ப்பதுடன், செக் போன்றவற்றை படித்துப் பார்த்து, அவற்றை உரிய கணக்கில் உடனே சேர்க்கும் திறன் படைத்தது என்கிறார். அங்குள்ள மற்றொரு தனியார் வங்கியும், இது போன்ற 800 ஏ.ரி.எம் இயந்திரங்களை, இந்த நிதியாண்டு இறுதிக்குள் அமைக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளது.

# விளையாட்டு உலகம்




## அவுஸ்திரேலியாவுக்கெதிராக மகெல அரைசதம்



அவுஸ்திரேலியாவுக்கு எதிராக சிட்டினியில் நடக்கும் 3வது டெஸ்டில், இலங்கை கேப்டன் மகெல ஜெயவர்த்தனா அரைசதம் அடித்துக் கைகொக்க, இலங்கை அணி நல்ல ஸ்கோரை நோக்கி முன்னேறியது. ஆஸ்திரேலியா சென்றுள்ள இலங்கை அணி, மூன்று போட்டிகள் கொண்டடெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு டெஸ்டில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா 2-0 என ஏற்கனவே தொடரை கைப்பற்றி, முன்னிலை வகிக்கிறது. மூன்றாவது டெஸ்ட், சிட்னியில் ''ரொஸ் இல் வென்ற ஆஸ்திரேலிய கேப்டன் மைக்கோல் கிளார்க், ''பீல்டிங்" தேர்வு செய்தார். முதலில் ''பேட் செய்த இலங்கை அணிக்கு கருணாரத்னே (5) ஏமாற்றினார். மற்றொரு துவக்க வீரர் தில்ஷான் (34) நிலைக்கவில்லை. பொறுப்பாக ஆடிய கேப்டன் மகெல ஜெயவர்த்தனா அரைசதம் அடித்தார். இவர்,72ரன்கள் எடுத்து அவுட்டானார். சமரவீரா(12) ஏமாற்றினார். இலங்கை அணி தேநீர் இடைவெளியின் போது,4விக்கெட்டுக்கு 169 ரன்கள் எடுத்திருந்தது. திரிமன்னே (37). மாத்யூஸ் (0) அவுட்டாகாமல் இருந்தனர். ஆஸ்திரேலியா சார்பில் ஜாக்சன் பேர்டு 2, மிட்சல் ஸ்டார்க், பீட்டர் சிடில் தலா ஒரு விக்கெட் கைப்பற்றினார்.

## இந்தியா ''ஏ"அணிக்கு முகுந்த் கேப்டன்



இங்கிலாந்துக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் பங்கேற்கும், இந்தியா ''ஏ" அணிக்கு, அபினவ் முகுந்த் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தியா வரும் இங்கிலாந்து அணி, 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் ஒரு நாள் போட்டி ஜன., 11 இல் ராஜ்கோட்டில் துவங்குகிறது. இதற்கு முன்பாக இங்கிலாந்து அணி, இரண்டு பயிற்சி போட்டியில் பங்கேற்கிறது. முதல் பயிற்சிப் போட்டி டில்லியில் இங்கிலாந்து, டில்லி அணியை சந்திக்கிறது. இதற்கு இந்திய ''ஏ" அணிக்கு அபினவ் முகுந்த் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். தமிழக வீரர் முரளி விஜயும் அணியில் இடம் பிடித்துள்ளார். இது தவிர, இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர், ஸ்ரீசாந்த் மீண்டும் வாய்ப்பு பெற்றுள்ளார்.

அணி விவரம்:
அபினவ் முகுந்த் (கேப்டன்), முரளி விஜய், ராபின் பிஸ்த், கேதர் ஜாதவ், அசோக் மனேரியா, ரோகித் மோத்வானி, ஜலாஜ் சக்சேனா, அஷய், தரேகர்,இஸ்வர் பாண்டே, ஸ்ரீசாந்த், ரிஷி தவான், பரஸ் டோக்ரா, மோஹித் சர்மா, ரசூல் பர்வேஸ்,

## டேவிஸ் கோப்பை தொடருக்கு சிக்கல்

ALL INDIA TENNIS ASSOCIATION

AITA

கூடுதல் சம்பளம் கேட்டு சோம்தேவ் தலைமையில், இந்திய டென்னிஸ் வீரர்கள், போர்க்கொடி தூக்கியுள்ளனர். இதனால், டேவிஸ் கோப்பை தொடரின் போது, பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. டேவிஸ் கோப்பை தொடரின் போது கிடைக்கும் வருமானத்தை, சர்வதேசக் குழு இந்திய டென்னிஸ் சங்கத்துக்கு (ஏ.ஐ.டி.ஏ.,) அனுப்பும். இதை வீரர்கள், நிர்வாகிகள் சரி சமமாக (50-50) பிரித்துக் கொள்வார். இதனிடையே வரும் பெப்., 1-3 இல் இந்திய அணி, ''ஆசிய-ஓசியானியா குரூப் 1 போட்டியில், தென் கொரியாவைச் சந்திக்கிறது. இதற்கு முன், தற்போதைய இந்திய அணி கேப்டன், ஷிவ் மிஸ்ரா, பயிற்சியாளர் நந்தன் பால் ஆகியோரை மாற்றுவது, அணிக்கு முழு நேர ''பிசியோதெரபிஸ்ட்' நியமிப்பது, தவிர, வீரர்களுக்கான சம்பள பங்கை அதிகரிப்பது என, சோம்தேன் தேவ்வர்மன் உள்ளிட்ட சிலர், சில கோரிக்கைகளை வலியுறுத்தி உள்ளனர். இதை நிறைவேற்றவில்லை என்றால், தென் கொரியாவுக்கு எதிராக, பங்கேற்க மாட்டார்கள் என்று தெரிகிறது. இதற்கு பூபதி, போபண்ணா ஆகியோர் ஆதரவு தெரிவித்துள்ளனர். ஆனால், பயஸ் இந்த போராட்ட அணியில் சேரவில்லையாம். இதுகுறித்து சோம்தேவ் தேவ்வர்மன் கூறகையில், 'இப்போதைய சூழ்நிலையில் யார் குறித்தும், எதுவும் சொல்லவிரும்பவில்லை. அடுத்து வரும் நாட்களில் இதுகுறித்த செய்திகளை தெரிந்து கொள்ளலாம்,"என்றார். பெயர் குறிப்பிட விரும்பாத ஏ.ஐ.டி.ஏ., நிர்வாகி ஒருவர் கூறுகையில், 'இது ஒன்றும் பெரி ய பிரச்சினையல்ல, தீர்க்கக் கூடியது தான். வீரர்களிடம் இதுகுறித்து ஏற்கனவே பேச்சுவார்த்தை துவங்கி விட்டோம். விரைவில் ஒப்பந்தம் ஏற்படும்," என்றார்.


நிலைகுலைந்த விட்டேன்

இந்திய டென்னிஸ் அணி கேப்டன், ஷிப் மிஸ்ரா கூறுகையில், எனது தலைமையில் சோம்தேவ் பல சிறப்பான வெற்றிகளைப் பெற்றுள்ளார். என்னை வேண்டாம் என, அவர் சொல்வதைக் கேட்டவுடன் நிலைகுலைந்து விட்டேன். சோம்தேவ் செயல் சிறுபிள்ளைதனமாக உள்ளது. இப்போதுள்ள பாம்ப்ரி, திவி சரண் உள்ளிட்ட இளம் வீரர்கள்,' இவ்விஷயத்தில் கவனம் செலுத்தாமல், தங்கள் போட்டிகளில் கவனம் செலுத்த வேண்டும். என்றார்.

நந்தன் பால் ஆவேசம்

பயிற்சியாளர் நந்தன் பால் கூறுகையில், ஏ.ஐ.டி.ஏ, என்னை பயிற்சியாளராக நியமனம் செய்தது. அவர்கள் பணியில் நீடிக்கச் சொன்னால் இருப்பேன். இதுதான் தொழில். வீரர்கள் என்ன நினைக்கின்றனர் என்பது குறித்தெல்லாம் கவலை கிடையாது," என்றார்.

## ஹோப்மேன் டென்னிஸ் : இத்தாலி வெற்றி



ஜெர்மனிக்கு எதிரான ஹோப்மேன் கோப்பை டென்னிஸ், லீக் போட்டியில் இத்தாலி அணி, வெற்றி பெற்றது. ஆஸ்திரேலியாவில் உள்ள பெர்த் நகரில், 25வது ஹோப்மேன் கோப்பை, டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதில் செர்யா, அமெரிக்கா உள்ளிட்ட எட்டு அணிகள் இரண்டு பிரிவுகளாக ''ரவுண்டு ராபின்" முறையில், லீக் சுற்றில் விளையாடுகின்றன.

கடந்த செவ்வாய் 'ஏ' பிரிவில் நடந்த, லீக் போட்டியில் இத்தாலி, ஜெர்மனி அணிகள் மோதின. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஜெர்மனியின் டாமி ஹாஸ் 7-6,7-6,என்ற நேர் செட் கணக்கில், இத்தாலியின் ஆன்ட்ரியாஸ் செப்பியை வீழ்த்தினார். பெண்கள் ஒற்றையரில் இத்தாலியின் பிரான்சஸ்கா ஷிய வோனே, 3-6, 6-3, 6-3 என்ற செட் கணக்கில் ஜெர்மனியின், டாட்ஜனா மாலக்கை வீழ்த்தினார்.

அடுத்து நடந்த கலப்பு இரட்டையர் போட்டியில் இத்தாலியின் ஷியவோனே, செப்பி ஜோடி 6-4,7-5என்ற நேர் செட் கணக்கில், ஜெர்மனியின் டாமி ஹாஸ், டாட்ஜனா மாலக் ஜோடியை வீழ்த்தியது இதன் மூலம் இத்தாலி அணி 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. ''பி' பிரிவில் நடந்த போட்டியில் அமெரிக்க அணி 2-1 எனற் கணக்கில், பிரான்சை வீழ்த்தி, இரண்டாவது வெற்றியைப் பெற்றது. முன்னதாக அமெரிக்க அணி, 2-1என தென் ஆப்ரிக்காவை தோற்கடித்தது.

## அடங்காப்பற்றின் மாவீரன்! வணங்காமுடி பண்டாரவன்னியன்

சென்றவாரத் தொடர்ச்சி...

''என்ன இது, இடையில் இருந்து உதிரம் கொட்டுகிறதே என்? " தன் கைகளால் ஆடையை உயர்த்தி பார்க்கும் போது, எதிரிகளின் துப்பாக்கிக் குண்டு இடையை உரசிச் சென்ற இடத்தில் இருந்து உதிரம் வழிந்து ஓடியது. உடனடியாக வைத்தியர் வரவழைக்கப்பட்டு, பச்சிலை மருத்துவம் நடைபெற்றது. விராலி, வேம்பு, மாவிலங்கைப் பட்டை என்பவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்ட, பச்சிலை உருண்டை காயப்பட்ட இடத்தில் வைத்து துனியால் சுற்றிக் கட்டப்பட்டது. இவையெல்லாம் முடிய, சூரியன் மறையும் நேரமும் சரியாக இருந்தது. இங்கும் கோட்டைகளில் இருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கிகள், துப்பாக்கிக்- குண்டுகள் எல்லாம் வீரர்களால் சேகரிக்கப்பட்டது. அத்தோடு உச்சப்படைகளின் மேல்நாட்டு வைன் போத்தல்களும், பெருந்தொகையாக மீட்கப்பட்டன. எல்லா வீரர்களுக்கும் இவ் வைன்கள் பகிர்நதளிக்கப்பட்டு இரவு கேளிக்கையும், வெற்றிக் கொண்டாட்டமாகவும் காணப்பட்டது. ஆனால் கைலைவன்னியனும்நல்லமாய்பாணரும் தமது தாய் மண்தொடர்பாக முக்கிய விவாதத்தில் ஈடுபட்டிருந்தனர்.

உடனடியாக ''யானையைத் தாக்கவேண்டும், இல்லையென்றால் எம் வெற்றிக்கு அர்த்தம் இல்லை கைலை வன்னியா" என நல்ல மாய்பாணர் கூற ''இல்லை மாமா இந்த நிலையில் நீங்கள் மிகவும் களைத்துள்ளீர்கள். இந்நிலையில் யானையை இரண்டு பக்கத்தால் அடிக்க வேண்டும், இல்லையென்றால் யானை எம்மை அடித்துவிடும். எனவே கைப்பற்றப்பட்ட கோட்டைகளை அளித்துவிட்டு பனங்காமம் போய், மீண்டும் ஒருநாள் யானையைத் தாக்குவோம்" என கைலைவன்னியன் கூற ''இல்லை நாம் இச்சந்தர்ப்பத்தை விட்டால் மீண்டும் கோட்டைகளையும், முகாம்களையும் வலிமையாகக் கட்டி, டச்சுப்படை வந்துவிடும். அதன்பிறகு யானையை நாம் அடிக்கமுடியாது போனாலும் போகலாம். என்ன ஆனாலும் சரி, யானையை நாம் நாளை அடித்தே ஆகவேண்டும் " எனக்கூறி மீண்டும் தான் மணலாறு சென்று தன் படையுடன் இணையவும், யானையைத் தாக்கும் திட்டம், திட்டமிட்டபடியும் நடைபெற வேண்டும். டச்சுப்படை பயந்த நிலையில் நாம் உடனடியாக யானையைத் தாக்கவேண்டும் வன்னியா" என தான் புறப்படுவதற்கு விடை கேட்டு நிற்க, ஒன்றும் செய்யமுடியாத நிலையில் தலை அசைத்தான் கைலை வன்னியன். மீண்டும் பனங்காமத்தரசை கட்டித் தழுவிவிட்டு, தன் கரும் புரவியில் ஏறி இரண்டு வீரர்களுடன் தன் உடலைக் கரும் துனியால் மூடி சிட்டாக மணலாறு நோக்கி பறந்தார் நல்ல மாப்பானர்....

பூநகரி கோட்டை கைப்பற்றப்பட்டு, அதிலிருந்து துப்பாக்கிகள், துப்பாக்கிக் குண்டுகள், பெரியரக துப்பாக்கிகள், இரண்டு இறாத்தல் எடையுள்ள அத்துப்பாக்கியில் போட்டு சுடும் குண்டுகள் என, பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதுடன், அக்கோட்டையும் எரியூட்டி இடித்து அழிக்கப்பட்டது. பனங்காமத்து இரண்டாவது தடையரணும் தகர்த்தப்பட்டது. இதில் முக்கிய பங்கு வகித்தது, பனங்காமத்தின் கப்பற்படையே. இதில் நல்லமாப்பாணர் பங்கும் குறிப்பிடத்தக்கது. மாதோட்டம், மன்னார், விடத்தல்தீவு ஆகிய இடங்களில் வாழ்ந்த பரவர், முக்குவர், திமிலர் ஆகியோரை உள்ளடக்கிய 120பேர்கொண்ட கப்பற்படை, இது வரை மீன்பிடித்தலையும், முத்துக்குளிப்பதையும் தவிர, யுத்த நடவடிக்கை எதிலும் ஈடுபடாத வீரர்களைக் கொண்டு, பூநகரி முதலாவது தாக்குதலை வெற்றிகரமாக நடத்தியிருந்தார்கள். பயிற்சிக்காலங்களில் தொடர்ச்சியாக மூன்று நான்கு நாட்கள் இடைஇடையே, சுகயீனம் என்று சொல்லிக் காணாமல் போன, நல்லமாப்பாணர் செய்த வேலை இதுவென, அப்போதுதான் வீரர்கள் உணர்ந்திருந்தார்கள். கட்டுக் கப்பலுக்கும் படகுகளுக்கும் தேவையான ஆயுதங்களை, இரவோடு இரவாக இந்தியப் பிரதேசங்களில் இருந்து,நல்ல மாப்பாணர் டச்சுக்காரரின் கைக்கூலிகளுக்கு பெரந்தொகையான நிதியினைக் கொடுத்து கொண்டுவந்தவையாகும். இவற்றையும் நடுக்கடலிலும், நடுக்காடுகளிலும் வைத்து பயிற்சி அளித்துள்ளார். இதற்கும் டச்சுப் படையின் கைக் கைக்கூலிகளைக் கொண்டு மிகத் தந்திரமாகவும் செய்து முடித்தார்.

– நாகநாதன் –

# உலகச் செய்திகள்


WORLD WATCH

## பாதுகாப்புச் சபையின் தலைமைப் பதவி பாகிஸ்தான் வசம்



ஐ.நா. பாதுகாப்புச் சபையின், தலைமைப் பதவியை, பாகிஸ்தான் ஏற்றுள்ளது. ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலில், 15 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இச்சபையில்நிரந்தர உறுப்பினர்களான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ்,ரஷ்யாா மற்றும் சீனா போன்ற நாடுகளுக்கு, வீட்டோ அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பாகிஸ்தான் உட்பட, 10நாடுகள் தற்காலிக உறுப்பினர்களாக உள்ளனர். இவைகள் 2ஆண்டுகளுக்கு மட்டுமே அப்பதவியில் இருக்க முடியும். இந் நிலையில், ஐ.நா சபையின் தலைமைப் பதவி, சுழற்சி முறையில் உறுப்பினர் நாடுகளுக்கு வழங்கப்படும். அந்த வகையில், ஜனவரி மாதத்துக்கான தலைமைப் பதவியை, பாகிஸ்தான் ஏற்றுள்ளது. இது தொடர்பாக ஐ.நா.வுக்கான பாகிஸ்தானின் நிரந்தரப்பிரதிநிதி, மசூத் கான் கூறு கையில், தலைமைப் பதவியில் திறம்பட செயல்படுவோம். முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக, உறுப்பினர்களிடையே உள்ள வேறுபாடுகளைக் களைந்து, ஒருமித்த கரத்தை ஏற்படுத்த, முயற்சி எடுப்போம். பயங்கரவாதம் தொடர்பாக, சிறப்பு விவாதக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்துள்ளோம். விரிவான நடவடிக்கை, பேச்சுவார்த்தை, மேம்பாட்டுப் பணிகள் ஆகியவற்றின் மூலம்தான், பயங்கரவாதத்தை முற்றிலுமாக ஒழிக்க முடியும் என்று தெரிவித்துள்ளார்.

## கிளிண்டன் தலையில் இரத்த உறைவு



அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர், ஹிலாரி கிளிண்டனின் தலையில் ஏற்பட்டுள்ள, ரத்த உறைவை சரி செய்யும் சிகிச்சை, மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டனின் மனைவியும், தற்போதைய வெளிவிவகாரத்துறை அமைச்சருமான, ஹிலாரி கிளிண்டன் (வயது 65) கடந்த மாதம், வயிற்றுப்போக்கால் பாதிக்கப்பட்டார். இதற்கிடையே அவர் மயக்கமடைந்து விழுந்ததால், கபால பகுதியில் அடிபட்டது. இதன் மூலம் மூளைக்கும், மண்டை ஓட்டுக்கும் இடைப்பட்ட பகுதியில் ரத்த உறைவு ஏற்பட்டது. இதற்காக அவர் நியூயார்க்கில் உள்ள பிரபல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும் ரத்த உறைவை தடுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு, அவரது உடல்நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது. விரைவில் அவர் பூரண குணம் பெறுவார் என, மருத்துவர்கள் உறுதியளித்து உள்ளனர். இந்நிலையில் ஹிலாரி கிளிண்டனின் பதவிக்காலம், இந்த மாதத்துடன் முடிவடைகிறது. அடுத்த வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரி நியமிக்கப்பட்டு உள்ளார்.

## ஈரானின் புதிய ஏவுகணைப் பரிசோதனை



போர்க் கப்பல்களைத் தாக்கியழிக்கும் அதி நவீன ஏவுகணையை, ஈரான் வெற்றிகரமாக பரிசோதித்தது. இதுகுறித்து ஈரானின் கப்பற்படை பயிற்சி, கடந்த ஐந்து நாட்களாக நடந்தது. இதில் பல்வேறு ஆயுதங்களின் பயன்பாடு குறித்து, விளக்கம் அளிக்கப்பட்டது. இப்பயிற்சியின் கடைசி நாளில், 200கிலோமீற்றர் இலக்கைத் தாக்கும் "கெதர்" என்ற அதிநவீன ஏவுகணை பரிசோனை செய்யப்பட்டது. இந்தப் பரிசோதனை, வெற்றியில் முடிந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஈரான் தன்னுடைய இராணுவ வலிமையைக் காட்டுவதற்காகவே, பரிசோதனையில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஹரி ஒரு குள்ளநரி, தலிபான் தீவிரவாதி.

ஹரி ஒரு குள்ளநரி, அவனால் சிங்கம் மற்றும் கழுகுகளை வேட்டையாட இயலாது, என்று தலிபான் தீவிரவாதியொருவர் தெரிவித்துள்ளார். ஆப்ஃகானிஸ்தானில், அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள், முகாமிட்டு, தீவிரவாதச் செயல்களில் ஈடுபடும், தலிபான்களை ஒடுக்கி வருகின்றனர். இங்குள்ள இங்கிலாந்துப் படையில், இளவரசர் ஹரியும் இடம்பெற்றுள்ளார். இவர் சமீபத்தில் தலிபான் தீவிரவாதி ஒருவரை, சுட்டு வீழ்த்தியாக தகவல் வெளியானது.

இதுகுறித்து அமெரிக்க அரசால் தேடப்படும், முக்கிய குற்றவாளிகளான குல்புதீன் ஹெக்மத்யார் என்பவர் கூறுகையில்: எதிர்வரும் 2014 ஆம் ஆண்டுக்குள், இங்கிலாந்துப் படையினர் தங்களது படைகளை, வாபஸ் பெற வேண்டும். இல்லையெனில் அவர்கள் மீது புனிதப் போர் நடத்துவோம் என்றார்.


மேலும் ஹரி ஒரு குள்ளநரி, அவரால் சிங்கம் மற்றும் கழுகுகளை வேட்டையாட முடியாது. ஹரியை தலிபான்கள் தேடி வருகின்றனர். இவர் குடித்துவிட்டு போதையில் ஒன்றுமறியாத ஆப்கானிஸ்தான் மக்களைக் கொன்று வருகிறார் என்றும் தெரிவித்தார்.

## சொன்னதை செய்து காட்டிய அதிபர் ஒபாமா



பணக்காரர்களுக்கு அதிக வரி விதிக்கும் மசோதா, அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் நிறைவேறியுள்ளது. உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடாக வர்ணிக்கப்படும் அமெரிக்கா, தற்போது நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளது. எனவே பணக்காரர்களுக்கு அதிக வரி விதிப்பது தொடர்பான மசோதா, அமெரிக்க நாடாளுமன்றத்தின் மேல் சபையான செனட்டில் கொண்டு வரப்பட்டது. ஒபாமாவின் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் இந்த செனட்டில் அதிகளவு இருப்பதால், இந்த மசோதாவுக்கு ஆதரவாக 89 வாக்குகளும், எதிராக 9வாக்குகளும் கிடைத்தன. இதனையடுத்து இம்மசோதாவை, பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் தொடங்கின. இந்த மசோதாவுக்கு குடியரசுகட்சிப்பிரதிநிதிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். இதனைத் தொடர்ந்து துணை ஜனாதிபதி ஜோ பிடன், அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினர். இதில் சுமூக உடன்பாடு ஏற்படுத்தப்பட்டது. இதன் பின் பிரதிநிதிகள் சபையில், இந்த மசோதா மீதான வாக்கெடுப்பு, நேற்றிரவு நடந்தது. இதில் மசோதாவுக்கு ஆதரவாக 257வாக்குகளும், எதிராக 167வாக்குகளும் கிடைத்தன. இரண்டு சபைகளிலும் ஒப்புதலைப் பெற்றுள்ளதையடுத்து, மசோதா ஜனாதிபதி ஒபாமாவின் ஒப்புதலோடு அமுலுக்கு வரும். இம்மசோதாவின்படி, தனிநபர் வருமானம், 4லட்சம் அமெரிக்க டொலர்களுக்கு மேல் இருந்தாலோ அல்லது குடும்ப வருமானம், 4லட்சத்து 50ஆயிரம் அமெரிக்க டொலர்களுக்கு அதிகமாக இருந்தாலோ, அவர்கள் பணக்காரர்களாக கருதப்பட்டு, அதிக வரி விதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரஷ்யாவின் புதிய சட்டம் அமெரிக்க உறவைப் பாதிக்குமா?



ரஷ்யக் குழந்தைகளை, அமெரிக்கர்கள் தத்தெடுக்க, ரஷ்யா தடை விதித்து, புதிய சட்டமொன்றைக் கொண்டு வந்துள்ளது. மனித உரிமைகளை மீறும் ரஷ்யர்களை, தண்டிக்கும் வகையில், அமெரிக்காவில் சமீபத்தில் இச்சட்டம் இயற்றப்பட்டது. இதற்குப் பதிலடியாக ரஷ்ய அரசு, தற்போது புதிய சட்டத்தை கொண்டுவந்துள்ளது. இதில் ரஷ்யக் குழந்தைகளை தத்தெடுக்க, அமெரிக்கர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், அமெரிக்க நிதியுதவியுடன் செயல்படும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும், ரஷ்யர்களை தொல்லைப்படுத்தும் விதத்தில் செயல்படும், அமெரிக்கர்களையும் ரஷ்யாவுக்குள் அனுமதிப்பதில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்தச் சட்டம் கடந்த வாரம் அமுலுக்கு வந்துள்ளது. இதனால் அமெரிக்காவுடனான உறவு மேலும் மோசமடையும் என, பல்வேறு தரப்பினர் புடினுக்கு எதிர்ப்புத்தெரிவித்து வருகின்றனர். இதற்கிடையே, வருகிற 13ஆம் திகதி மாஸ்கோவில் பிரமாண்ட பேரணி நடத்தவும் திட்டமிட்டுள்ளனர்.

## இரத்த நாடாக சிரியா: 2012 இல் வன்முறைக்கு பலியானோர் 39,520



கடந்த 21 மாதங்களாக நீடித்து வரும் சிரியா வன்முறையில், 2012இல் மாத்திரம் 39,520பேர் பலியாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மோதல் தொடங்கி, 2011ஆம் ஆண்டிலிருந்து இதுவரை, அரச படைகள் மற்றும் கிளர்ச்சிக்குழுக்களுக்கு இடையிலான இரு தரப்பு வன்முறையிலும் மொத்தம் 46,086 பேர் கொல்லப் பட்டிருப்பதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தகவலை சிரியாவில் இயங்கி வரும், மனித உரிமைகள் கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது. 2011இல் 14 வீதமானோர், அதாவது 6548பேர் மட்டும் கொல்லப்பட்டிருந்தனர். தற்போது நடந்து வரும் இந்த வன்முறையின் உச்சக் கட்டமாக, அலெப்போவில் உள்ள விமான நிலையம் மூடப் பட்டுள்ளது. பலி எண்ணிக்கையின் உச்சக் கட்டமாக, புதுவருட தினத்தில் கூட 136 பேர் பலியாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மேலும் வன்முறை தொடர்ந்தால், 2013ஆம் ஆண்டு, இவ்விரு ஆண்டுகளை விட மோசமான உயிர் இழப்புக்கள் ஏற்படக்கூடும் என ஐ.நா மற்றும் அரபு சமூகத்தின் விசேட தூதுவர், லக்தர் பிராஹிமி கூறியுள்ளார். இவ் எண்ணிக்கை வெறும் 25,000 என கவனயீனமாகக் கணிக்க வேண்டாம் எனவும், அங்கு அதிகரித்து வரும் உயிரிழப்புக்கள் இவ்வருடம் குறைந்தது. 10,000 பேர் வரை கொல்லப்படலாம் என்றே காட்டுகின்றன எனும் அதிர்ச்சியான செய்தியையும் அவர் கூறினார். இந்நிலையில் பலவீனம் அடைந்து வரும், சிரியா அதிபர் பஷார் அல் அசாத்தின் ஆட்சி, 2013 இல் வீழ்ச்சியடையும் எனவும், கிளர்ச்சிப் படையினர் தமது உரிமைகளை மீளப் பெறுவர் எனவும், அயல் நாடுகளில் தஞ்சம் புகுந்து வரும் இலட்சக் கணக்கான சிரியா அகதிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

பக்க வடிவமைப்பு – அ.ஜினோதன்

# விந்தை உலகம்

## ஆங்கில அகர வரிசைப்படி அமைந்த கட்டிடத்தொகுதி...

நீங்கள் எத்தனையோ விதமான, அசத்தல்க் கட்டிடங்களைப் பார்த்திருப்பீர்கள். இன்று நீங்கள் பார்க்கப் போவது, இதுவரைப் பார்த்திராத ஒரு வித்தியாசமான, அழகான கட்டிடத்தொகுதி. ஆம் ஆங்கில அகர வரிசைப்படி அமைந்துள்ளது. இந்தக்கட்டிடத்தின் ஒவ்வொரு அடுக்கின் வெளிப்புறத் தோற்றமும். அதாவது கட்டிடத்தின் வெளிப்பகுதி. யன்னல் இருக்கவேண்டிய வெளிப்பகுதி ஒவ்வொன்றும், ஆங்கில அகர வரிசைப்படி அமைக்கப்பட்டுள்ளது. வெளியில் இருந்து பார்க்கையில், மிகவும் அழகாகக் காணப்படுகிறது. இது ஆம்ஸ்டர்டாமில் அமைந்துள்ளது. எனினும் இன்னும் பூரணமாக கட்டுமானப் பணிகள் நிறைவடையவில்லை எனத் தெரிகிறது. வெகுவிரைவில் இது முற்றிலும் பூர்த்தியாகிவிடும் என தெரிவிக்கப்படுகிறது.




## மேல் மாடியில் நீச்சல் தடாகம்: மும்பையில் அழகிய கட்டிடம்...!

கட்டிடக்கலையின் பரிணாமம், நாளுக்கு நாள் விண்ணைத்தொட்டுக் கொள்ளும் அளவு, வளர்ந்து கொண்டு செல்கின்றது. இங்கு நீங்கள் பார்ப்பதும், கட்டி நிர்மாணத்துக்கு ஒரு சிறந்த உதாரணம். இந்தியாவின் மும்பைப் பகுதியில் அமைந்துள்ள, இந்த 37 அடுக்கு மாடிகள் கொண்ட இக்குடியிருப்புத் தொகுதி, பூங்காக்கள் நீச்சல் குளங்கள் உட்பட, பல நவீன வசதிகளுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதன் சிறப்பம்சம் அதன் மேல் மாடியில் மிகவும் அழகான முறையில், அனைத்து மாடிகளிலும் நீச்சல் குளம் அமைக்கப்பட்டுள்ளது. மேல்மாடி கண்ணாடியால் அமைக்கப்பட்டு அது நீச்சல் தடாகமாக மாற்றப்பட்டுள்ளது.



## சுஜாதாவின் கற்பனை ஸ்கானர், நிஜமாகிறது



எந்திரன் படத்தில் ஒரு காட்சி வரும். அதாவது ரஜினிகாந் முடிவெட்டப் போகும் போது, கூடவே ரோபோ சிட்டியும் (அதுவும் ரஜினி) போகும். சலூனுக்குள் சென்று, படிக்க ஏதாவது புத்தகம் கொடுக்கச் சொல்லும் போது, சலூன் உரிமையாளர் அங்குள்ள புத்தகங்களைக் கொடுப்பார். ரோபோ சிற்றி யானது டெலி:.போன் டைரக்டரி முதல் அத்தனை புத்தகங்களையும் அட்டை முதல் இப்படி அப்படியென்று புரட்டிவிட்டு, ஒரே படிச்சாச்சு என்று சொல்லும் போது, எல்லோருக்கும் திகைப்பாக இருக்கும். சுஜாதா அப்போது கற்பனையாக எழுதிய விடயம், இப்போது உண்மையாகியுள்ளது. அதாவது ஜப்பானின் இகாவோ ஆய்வுகூடம், உலகத்தின் அதிவேக ஸ்கேனரைக் கண்டு பிடித்துள்ளது. இன்றைய சூழ்நிலையில், ஒரு பக்கத்தை ஸ்கேன் பண்ண, குறைந்த பட்ச நேரம், 45 வினாடிகள் முதல், சில சமயம் 3 நிமிடம் வரைக்கும் ஆகும். ஆனால் புதிய ஸ்கேனர், ஒரு நிமிடத்தில் 250 பக்கங்களை ஸ்கேன் பண்ணும். அது போக ஆட்டோ:.பிலிப்பிங் மெசின் இதில் ஸ்லாட்டர் கூட இருக்கும். இதில் ஒரு புத்தகத்தை வைக்கும்போது, அதிவேகத்தில் புரட்டி, அதுவே ஸ்கேன் பண்ணும். அது மட்டுமல்ல, இதை "3டி" முறையில் பதிவு செய்யும் திறனையும் கொண்டுள்ளது. அதை அப்படியே 400 பிக்ஸல் (400Pixels) வரை கொண்டு வந்து, பின்பு அதை "3டி" முறையில் கூட மாற்றம் (Convert) செய்ய முடியும்.
















இப்பத்திரிகை இலக்கம் 165A, குருமன்காட்டில் அமைந்துள்ள G.H பதிப்பகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 06.01.2013 அன்று வெளியிடப்பட்டது.